சுமைகள்

சித்திரை, வைகாசி, ஆனி 1996 இதழ்18. April, Mai, Juni 1996 Sumaihal 18 Kr.10.

# சூரியக் கதிர் 2ம் புலிகளின் பின்னடைவும்

,லங்கை அரசினால் ஆரம்பிக்கப்பட்ட சுரியக்கதிர் 2 எனப்பெயரிடப்பட்ட இன அழிப்புப் போரின் 7 வது நாளாகிய இன்று கிலாலிவரை இரானுவம் தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்துள்ளது. இருந்தபோதும் வடமாராட்சிப்பகுதியை நோக்கி இராணுவத்தின் முன்னேற்றம் மந்தகதியாக இருக்கின்றதாக பல செய்திஸ்தாபனங்கள் அறியத்தந்துள்ளன. இருந்தபோதும் 27.4.96 ஆகிய இன்று புலிகளின் செய்திப்படி கிலாலியில் பலத்த சண்டை இடம்பெறுவதாக அறிவித்துள்ளனர். ஆனால் பாதுகாப்புப் படையினரோ வெள்ளி (26.4.96) இரவன்று கிலாலியை தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து விட்டதாக அறிவித்துள்ளனர் இருந்தபோதும் இவ்வாறு இரு தரப்பினரின் செய்திகளுக்கிடையே முரன்பாடுகானப்பட்டபோதிலும் கிலாலியை அண்டியும், கிலாலிக் கடற்கரையில் வாழும் மக்களும் பாதுகாப்புப் படையினரின் கட்டுப்பாட்டுக்குள் உள்ள பகுதியை நோக்கி நகர்வதாக நடுநிலமை அமைப்புகள் அறியத்தந்துள்ளன. இக்காலகட்டத்தில் தமிழீழ விடுதலைப்புலிகளின் புணர்வாழ்வு அமைப்பானா ரீ.ஆர்.ஓ அரசை தற்காலிக போர் நிறுத்தத்திற்கு உடன்படுமாறும் அதேவேளை சமாதானப் பேச்சுக்கு முன்வருமாறும் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இவை ஒருபுறமிருக்க யேர்மனியில் புலிகளின் உறுப்பினர்கள் இலங்கை அரசு யுத்தத்தை நிறுத்த துன்றுமாறு அமெரிக்க அதிபர் கிலின்றனுக்கு குயஓ போடுமாறு பொதுமக்களை கேட்டிருக்கின்றனர். இவ்வாறு தமது இயலாத்தன்மையை வெளிப்படுத்தி நிற்கும் புலிகள் தமது குறிக்கோளை கைவிடும் நிலைக்கு நகரும் நிலை காணப்படுகின்றது. அதைவிட இலங்கை அரசின் இவ்யுத்தமானது அனைத்து தமிழ் மக்களையும் பாதிப்படையச் செய்வதுடன் ஓர் இன அழிப்பயையும் நடத்திவருகின்றது. முன்பு பல இயக்கங்களால் கட்டுப்படுத்தப்பட்ட இலங்கை இராணுவம் இன்று தனித்து நிற்கும் புலிகளால் மாத்திரம் எப்படிக் கட்டுப்படுத்த முடியும் என்ற கேள்வி பல தமிழ் மக்களிடையே எழுந்துள்ளதைக் காணக்கூடியதாகவுள்ளது. இதற்கிடையில் தமது இயலாத்தன்மையை ஒப்புக்கொள்ளும் வகையில் புலிகளின் பிரதிநிதியான அன்ரன் ராஜா பிபிசிக்கு அளித்த பேட்டியில் தமது 13 வருடகால யுத்தத்தினை முடிவுக்குக் கொண்டுவர தாம் பேச்சுவார்த்தைக்கு தயார் எனவும், அதேவேளை தமக்கும் இலக்கை அரசுக்கும் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு மூன்றாவறு நபர் தேவைப்படுவதால் அதற்கு வெளிநாட்டு அரசுகள் முன்வரவேண்டும் என்றும் கூறி இதில் நோர்வே, கனடா போன்ற நாடுகளின் தலையீட்டையும் மன்மோழிந்துள்ளார். இதனையடுத்து புலிகளின் தேலைபேசிச் சேவையில் இது இதை மறுத்தும் அதேவேளை புலிகளின் தலைமைப்பீடம் யாழ்நகரைவிட்டு இராணுவம் வெளியேறினால் ஒழிய தாம் பேச்சுவார்த்தை நடத்தப் போவதில்லை எனக் கூறுகின்றது. இக்கூற்றை தமிழ்மக்கள் (புலிகளின் ஆதரவாளர்கள்) மாத்திரம் கேட்கும் தேலைபேசிச் சேவையில் கூறியுள்ளது குறிப்பிடத்தக்கது. இவற்றைவிட தேழிலாளர் தினமான மே 1ம் திகதி நோர்வெயில் நடந்த கூர்வலங்களில் நோர்வே நாட்டுப்பிரதமர் குறகால்ன் (Gro) அவர்களை நமது நாட்டுப்பிரச்சனைக்கு தீர்வு கானும்படி பல தமிழர்கள் வேண்டுவது போல சுலெகங்களைத் தாங்கி நடந்துள்ளனர். ஆனால் புலிகளின் வேண்டுகோளையடுத்து சுவிஸலாந்து தான் இடைத் தரகராக நிற்க தாமாக முன்வந்துள்ளது. இருந்துபோதும் இலங்கை அரசும் தம்மை அழைக்கும் பட்சத்திலேயே தரகர்வேலை செய்ய தாம் முன்வருவோம் என கூறியுள்ளது இங்கு கவனத்திற் கோள்ளவேண்டிய விடையமாகும். அதாவது இலங்கை

அரசு இப்போரை தமிழ் மக்களின் இனஅழிப்புப் போராக நடத்தும் அதேவேளை வெளிநாடுகளுக்கு இப்போரில் குற்றவாளியாகவும் அதேவேளை மனித உரிமை மீறல்களை அதிகம் புரிபவர்கள் புலிகள் எனவும் பிரச்சாரம் செய்துவருவதுடன், தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்த பகுதிகளில் மக்களை அதிகம் துன்புறுத்தாதும் அவர்களின் தேவைகளை புாதிசெய்ய இராணுவத்தினர் முயல்வதன் மூலமும் தமிழ் மக்களுக்கும் இராணுவத்தினருக்கும் இடையில் இருந்த முரன்பாட்டை தீர்க முற்படுவதுடன் புலிகளால் தான் இப்போர் எனவும் நிறுவ முற்படுகின்றது இலங்கை அரசு. யுத்தத்தால் நமது நாட்டிலேயே அகதிகளாக வாழ்ந்த மக்கள் அதிகளவில் தற்போது இராணுவத்தின் கட்டுப்பாட்டுக்குள் இருக்கும் பிரதேசத்தை நோக்கி நகர்ந்து வருகின்றனர்.

சென்ற வருடம் டிசம்பரில் இராணுவத்தால் மேற்கொள்ளப்பட்ட யுத்தத்தில் பல லட்சம் மக்கள் வலிகாமம் பகுதியில் இருந்து புலம்பெயர்ந்தது குறிப்பிடத்தக்கது. இதில் புலிகளும் மக்களை பலவந்தமாக வலிகாமத்தில் இருந்து புலம்பெயரவைத்தனர். அதனால் நாட்டிலேயே அவர்களுக்கு எதிர்ப்பு வலை உருவாகியது. இதன்காரணத்தால் இம்முறை நடந்த யுத்தத்தில் மக்களின் இடப்பெயர்வு மிகக் குறைவாகவே காணப்பட்டது. இதனால் மக்கள் அதிகமானேர் இராணுவத்தின் கையில் சிக்கியுள்ளதுடன் மக்களோடு மக்களாக நின்று தாமும் உட்புக புறப்பட்ட பல புலிகளும் இராணுவத்தின் கையில் சிக்கியுள்ளனர். இதைவிட மக்களுடன் புலிகளும் வரக்கூடும் என்ற ஐயத்தில் இராணுவத்தினர் இளம் வயது வாலிபர்களையும், பெண்களையும் கைது செய்து தனியாக முகாம் ஒன்றுக்கு அழைத்துச்சென்று விசாரிக்கப்படுகின்றனர். இதன்மூலம் பல அப்பாவி வாவிபர்களும், பெண்களும் பாதிக்கப்படுகின்றனர். இவ்வாறு தரம் பிரித்தவர்களில் சந்தேகத்துக்கிடமானோர் உடனடியாக கொழும்புக்கு ஏற்றப்படுகின்றனர்.

இதன்பின்னர் சூசிய கதிர் 2 இன்தொடர்ச்சியாக வடமாராட்சியையும் புலிகள் வசம் இருந்து இரானுவம் 3 மணிநேரத்தில் கைப்பற்றியது. இராணுவத்தினர் முன்னேறுகையில் தமக்கு பாரிய எதிர்ப்பு ஏற்படலாம் என என்னினர் ஆனால் புலிகள் பக்கம் இருந்து எந்தவித எதிர்ப்பும் ஏற்படவில்லை. ஆதலால் அவர்கள் பாதயாத்திரை போவதற்கு எடுத்த நேரமே 3 மணிநேரமாகும் என இராணுவத்தரப்பின் செய்திகள் கூறுகின்றன. இதற்கிடையில் வலிகாமம், தொன்மாராட்சி போன்ற இடங்களை கைப்பற்றும் வடமாராட்சிக்கு போது இடம்பெயர்ந்த பல மக்கள் வடமாராட்சி இராணுவத்தின் கட்டுப்பாட்டுக்குள் வரமுன்னரே தாமாக இராணுவக்கட்டுப்பாட்டுக்குள் வந்து சேர்ந்துள்ளனர். இவ்வாறு 3மணிநேரத்தில் கைப்பற்றப்பட்ட வடமாராட்சி உட்பட இராணுவம் யாழ் குடாநாட்டை முழுமையாக கைப்பற்றிவிட்டது.

கைப்பற்றிய இடங்களில் மக்கள் 2லட்சத்துக்கு அதிகமானோர் காணப்பட்ட போதிலும் ஏனையவர்களையும் தமது இருப்பிங்களுக்கு மீண்டும் அழைப்பது இராணுவத்தினருக்கு ஒரு சவாலாகவே உள்ளது. வவுனிய, கிளிநோச்சி போன்ற பகுதிகளில் அதிகமானவர்கள் காணப்பட்டபோதிலும் எல்லோரும் தாம் தமது இருப்பிடத்திற்கு செல்ல விருப்பமாக உள்ளனர் என்ற இராணுவத்தின் கருத்து ஏற்றுக்கொள்ப்பட முடியாவிட்டாலும் அதிகம் பேர் விரும்புகின்றனர் என்பது உண்மையே. காரணம் தாம் ஆண்டாண்டு காலமாக வாழ்த சொந்த மண் அல்லவா அது.

புலிகளின் கட்டுப்பாட்டுக்குள் தற்போது இருக்கும் கிளிநோச்சிப் பகுதியில் உள்ள இடம்பெயர்ந்த குடும்பங்களுக்கு அகதி பொருட்கள் வளங்கப்பட மாட்டாது என இரசு அறிவித்துள்ளது. ஆனால் மக்கள் என்ன சேய்வார்கள் உண்பதற்கு உணவும் இல்லை வாழ விடும் இல்லை என்ற நிலையில் மக்களின் நிலை உள்ளது. அத்தோடு யாழ்நகரில் இராணுவத்தினரின் கட்டுப்பாட்டுக்குள் உள்ள மக்களை செய்தியாளர்கள் பேட்டி காணுகையில் தாம் பட்டகஸடங்களைின் விளைவாகவே இனி இராணுவத்தினரின் கையில் பிடிபட்டு இறந்தாலும் பறவாயில்லை என வீடு திரும்புவதாக கூறுகின்றனர். இவற்றைவிட குடாநாட்டைக் கைப்பற்றியபோது அவர்களின் கட்டுப்பாட்டுக்குள் அகப்பட்ட மக்கள் தொலைபேசி மூலம் தாம் ஊயிருடனும் சுகமாகவும் உள்ளோம் என ஆறியத்தந்துள்ளனர். இவற்றைவிட வவுனியாவில் தாமாக முன்வந்த 100 பேரை 20.5.96 மட்டில் யயாழ்பாணத்திற்கு விமான மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். அவர்களை திருப்பி அனுப்பும் போது பிபிசி செய்திநிருபருக்கு அவர்கள் வளங்கிய பெட்டியில் தமது உறவினர்கள் யாழ் குடாநாட்டில் இருந்து கடிதம் போட்டதாகவும் அக்கடிதத்தில் தாம் பிரச்சனையின்றி இருப்பதாகவும் எழுதியள்ளதாகக் கூறினர். இதனாலேயே தாம் அங்கு செல்வதாகவும், தமது சொந்த இடத்தில் இருந்து கூளோ கஞ்சியோ குடித்தால் நால்லது என்றும் கூறிச் சென்றனர். இதனைத் தொடர்ந்து 26.5.96 அன்று இலங்கை அரசு தாம் குடிபெயர்ந்த மக்கள் மீளவும் திரும்பி செல்வதற்காக யாழ்நகருக்கு இலவச பிரயாண சேவையை மேற்கொள்ளப் பொவதாக அறிவித்துள்ளது. அதாவது திருகோணாமலை வரை பஸ்வண்டியிலும் அங்கிருந்து கப்பல் மூலமாகவும் அனுப்ப உத்தேசித்துள்ளதாக அறிவித்துள்ளதுடன் ஒரு விமானச்சேவையையும் ஒழுங்கு செய்துளள்ளது. அதேவேளை 26.5.96 அன்று வவுனியாவில் இருந்து 60

பேரும் கொழும்பில் இருந்து 100பேரும் புறப்பட்டுள்ளனர் எனவும் அறிவிக்கப்படுகின்றது.

இதற்கிடையில் இவ்வளவு காலமும் இலங்கை அரசுடன் கைகோர்த்து ஆதாயம் தேடிய மற்றைய குழுக்கள் தாமும் யாழ்பாணம் செல்வதற்கு வரிந்து கட்டியபடி உள்ளபோதும் சந்திரிக்கா அதற்கு அனுமதிக்கவில்லை. ஆனால் புலிகளின் தெலைபெசியில் மற்றைய குழுக்கள் யாழ் சென்றுவிட்டதக அறிவித்துள்ளனர் இது தவறும் கூட. இன்றுவரை குறைந்தது 13 ஆண்டுகளுக்கு மேலாக யுத்தத்தின் கோரப்பிடியில் சிக்குண்டு தவித்த மக்களுக்கு இது ஒரு அறுதலாக இருக்கும் என்ற எண்ணம் பலர்மத்தில் காணப்படுகின்றது. ஆனால் தற்போது மக்கள் ஆறதலாக இருப்பார்கள் என்பது உண்மை அல்ல. மாறாக புலிகள் மீண்டும் மறைந்திருந்து தாக்குதல் நடத்துவதன் மூலம் இராணுவத்தின் கோபத்தை கிளறுவார்கள் அப்போது இராணுவம் தமிழ் மக்கள் மீதுதான் பாயும் என்பதை மக்கள் அறிந்தும் உள்ளனர். இருப்பினும் அவர்கள் மீண்டும் திரும்புவதற்கு காரணம் தமது சொந்த இடத்தில் இருந்து என்ன நடந்தாலும் பறவாயில்லை என்பதும் இதுவரை நம்பியிருந்த புலியினரின் கைவிருப்புமே. இவர்களில் செல்லைக் கேட்டு ஓடிவந்த இவர்கள் தற்போது யாரும் அற்ற நிலையில் இருப்பதிலும் விட இராணுவத்தின் பிடியில் இருப்பது நல்லது என நம்புவதுதான். அத்துடன் யாழ்நகரில் மக்களின் வாழ்க்கை வழமைக்குத் தரிும்பியுள்ளது.

25.5.96 அன்று சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் மீண்டும் தனது அலுவலகளை யாழ்நகரில் ஆரம்பிப்பதற்கு அரசு அனுமதித்துள்ளதாக அறியப்படுகின்றது. அதேவேளை செஞ்சிலுவைச் சங்கமானது யாழ்நகரில் புலிகள் என சந்தேகத்தின் பெயரில் கைது செய்யப்பட்டவர்களுடன் தனிமையில், சாட்சியகள் இல்லாது உரையாட விரும்புவதாகவும் அதேவேளை பிடித்துவைக்கப்பட்டுள்ள கைதிகளை பலாலி, காகேசந்துறை, சாசகச்சேரி, யாழ்ப்பாணம் பொன்ற இடங்களில் உள்வர்களின் உடல்நலத்தை கண்கானிக்கும் வகையில் இவர்களுக்கு என ஒரு மருத்துவரையும் அமர்த்துவதற்கு அனுமதி கோரியுள்ளது. சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினி இலங்கைத் தலைவர் கூறுகையில் யாழ் மக்கள் வழமையான வாழ்கைக்கு திரும்பியுள்ளமையும், அதேவேளை அங்கு நடப்பவற்றை கண்காணிக்கவும் முடியும் என கூறினார்.

இன்று தம்மை பாதுகாப்பதற்காக குடாநாட்டை விட்டு தப்பிவந்த புலிகளினால் தமிழ் மக்கள் இனும் அடிமைகளாகவே வாழவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. அதாவது தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைக்கான போராட்டமாக வெடித்த இப்போராட்டம் இன்று இலங்கை இனவாத அரசினாலும், பாசிச சார்புள்ள புலிகளினாலும் நசுக்கப்பட்டுள்ளதை அனைவரும் அறியக் கூடியதாகவுள்ளது. தாம் மட்டும் தப்,பினால் பொதும் என்று வன்னிக் காடுகளினுள் தஞ்சம் புகுந்துள்ள இவர்கள் அன்றில் இருந்து இன்று வரை தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைக்கான போராட்டத்தை என்றும் முன்னேடுக்கவில்லை மாறாக தமது வர்க்க நலன்கருதி தம்மை வளர்த்துக் கொள்ளம் நோக்கில் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைக்கான போராட்டத்தை தம் போராட்டமாக மாற்றியமைத்ததே இவர்களின் செயற்பாடாகும். இதைவிட தாம் தான் தமிழ் மக்களின் ஒரே ஒரு சக்தி என தம்மைத் தம்பட்டம் அடித்து மாற்றுச் சக்திகளின் குரல்வளையை நரித்த இவர்கள் இன்ற இனவாத அரசின் பிடியினால் குரல்வளை நரிக்கப்பட்டுள்ளது. இதைப்பற்றி எதுவும் பெச விரும்பாத இவர்கள் தாம் இன்றும் மறைந்திருந்து தாக்குதல் நடத்துகின்றனர் என்று தமது தெலைபெசிச் சேவையில் கூறிவருகின்றனர்.

தமிழ் மக்களின் யுத்தம் மக்கள் யுத்தமாக மாற்றப்பட்டு விட்டது என பலதடவை கூறியதுடன் தமது இராணுவம் மக்கள் இராணுவம் எனக் கூறியும் வந்துள்ளனர். இது இன்றைய நிலையில் எந்தளவு பெய் என நிருபித்துள்ளது. மக்கள் அரசியல் மயப்படுத்தப்படாமல் மக்களினை துப்பாக்கி மூலம் தம்கதைகளை எற்கவைத்ததன் விளைவே இன்றைய தோல்வியாகும். வீழ்ந்தாலும் மீசையில் மண்படவில்லை என்பது போல தாம் தற்போது தாக்குதல்கள் நடத்திவருகின்றோம் என்று கூறிவருவது மக்களால் ஏற்றுக்கொள்ளப்படாமல் இருப்பதைக் காணக்கூடியதாகவுள்ளது. ஆயுதம் என்பது எதிரிகளுக்காகாத் துக்கப்படவேண்டிய ஒன்று ஆனால் அது தமது இயக்கநலனுக்காக துக்கப்பட்டதன் விளைவே இதுவாகும். இதைவிட மற்றய இயக்கத்தில் இருந்து கருத்து முரண்பாட்டின் காரணமாக தம்மை விலக்கிக் கொண்ட பலரை புலிகள் தமது கருத்துக்கு மாற்றக்கருத்துள்ள இவர்களை களையேடுக்கத் தொடங்கியது அவ்வரிசையில் பலர் அடங்குவர்.

சுயநிர்ணய உரிமைப்போரை முடிவுக்கு கொண்டு வரும் பொருட்டு புலிகாளால் நடத்தப்பட்ட யுத்தம் வெறும் அப்பாவி மக்களை பலிகொடுப்பதிலேயே போய் முடிந்துள்ளது. தனது நலனைப் பாதுகாக்க சாப்பிட மட்டும் தான் வாய்திறக்க முடியும் என்ற நிலையை உருவாக்கிய இவர்கள் தாம் செல்வதை செய்து முடிக்கும் தன்மையுள்ளவர்களாக சிறுவர்களை தேர்ந்தெடுத்தனர். இதன்மூலம் தாம் எது நினைத்தாலும் அதை செய்து முடிக்கும் நிலை ஏற்பட்டது இதன்விளைவுதான் பல இராணுவ முகாம்களின்தகர்பு ஆனால் அது ஒரு போராட்டத்தின் வெற்றியல்ல மாறாக எதிரியை பலப்படுத்த உதவிய விடையமாக இருந்துள்ளது.

இதைவிட கொழும்பு மத்திய வங்கியைத் தாக்கியதன் மூலம் தமக்கு இராணுவ ரீதியல் வெற்றி கிடைத்ததாக கூறும் இவர்கள் ஒரு விதத்தில் இனவாத அரசுக்கு தனது பிரச்சாரத்தை மேற்கோள்ள துணைபோயுள்ளனர். இவ்வாறு எதையும் நீண்டகால யுத்த தந்திரத்துடன் திட்டமிடாது குறிகிய கால அதாவது உடன் வெற்றி பெற்றால் போதும் என்று எண்ணியமையும் இவர்களின் தோல்விக்கு இன்னும் ஒரு காரணமாகும்.

யாழ் நகரம் கைப்பற்பப் படும் போது மக்கள் தாமாக இடத்தை விட்டு நகராமல் இருக்கையில் முகம் மூடிஅணிந்த புலிகள் அவர்களைத்தாக்கிய சம்பவங்களும் உண்டு. அதாவது தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைக்கான போரில் தமிழ் மக்களின் பேச்சுரிமை, எழுத்துரிமை, கருத்துச்சுகந்திரம் என்பன புலிகளினாலேயே பறிக்கப்பட்டிருந்தது. அவ்நிலையில் புலிகளினால் நடத்தப்படும் போராட்டத்தை மக்கள் எவ்வாறு அங்கிகரிப்பார்கள். இதைவிட இவ்வளவு காலமும் இனவாத இராணுவம் தனக்கு ஒன்று நடந்தால் அதற்குப் பதிலாக மக்களை பழிவாங்கியது (இதில் புலிகளும் கைதேர்ந்தவர்கள்) அனால் தற்போது அவைகள் குறைவாகவுள்ளதினாலும் மக்களின் மனதை மாற்றும் வகையில் அரசு ஓர் இனவாதத் தீர்வுத்திட்த்தை மக்கள் முன் நிறுத்தயமையாலும் மக்கள் இதுவரை பட்ட கஸ்டங்களுக்கு இது ஓர் இடைவெளியாகக் கருதுவதாலும், இதுவரை காலமும் (10 ஆண்டுகள்) முற்றாக மறுக்கப்பட்டிருந்த சுதந்திரங்கள் கட்டுபப்படுத்ப்பட்ட நிலையில் குறிப்பிட்டளவு கிடைப்பதாலும் மக்களின் மனங்களில் இருந்த புலிகள் அன்னியப்படும் வாய்ப்பு உள்ளது. இருந்த போதும் இதுவரை பலிகோடுத்த தன் மகனையோ அல்லது மகளையோ, அல்லது உறவினரையோ இவர்கள் மறக்க முடியாது தான் ஆதலால் மக்களுக்கு இந்த இனவாத அரசின் மீதான ஆத்திரமும் வஞ்சம் தீர்க்கும் நினைப்பும் மக்கள் மத்தியில் இருந்து முற்றாக உடனே அழிந்து விடுவதற்கான வாய்ப்பு இல்லை.

இன்று தமது நலனைப் பாதுகாப்பதற்காக தமிழ் மக்களை எதிரியின் கையில் காட்டிக் கோடுத்து தாம் செகுசு வாழ்க்கை வாழ்ந்து வரும் மற்றைய இயக்கங்கள் தம்மை நியாயப்படுத்தி, தாம்போராட்டத்தை நடத்த முன்வருவதுடன் மக்களை கவரும் வகையில் பேசியம், உணர்வலைகளைத் துண்டிவிட்டும் தாம் லாபம் அடைய முற்படுவார்கள் இவர்களின் வார்த்தைக்கு மக்கள் தம்மை அர்ப்பணிக்காது விழிப்புடன் இருக்க வேண்டும் என நாம் கோருகின்றோம். அதேவேளை மக்களின் நண்பர்களாகவும் சுயநலவாதிகளின் எதிரிகளாகவும் உள்ளவர்களை இனங்கண்டு இவர்கள் தலைமையில் அணிதிரழ்வதன் மூலம் எதிர்காலத்தில் சரியான ஓர் போராட்டத்தை மக்களாகிய நீங்கள் வழிநடத்த முடியும். இவ்வாறு தமது நலனின் அடிப்படையில் நின்று நடத்திய இப்போராட்டத்தை மாற்றும் வகையில் உழைக்கும் மக்களின் தலைமையிலான ஓர் அணி இப்போராட்டத்தை வடிவமைத்து, வழிநடத்துவதன் மூலமும் மக்களை அரசியல் மயப்படுத்துவதன் முலமுமே தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைக்கான போராட்டம்

# சுமைகள்.

சுமைகள் சென்ற இதழும் இவ்விதழும் தாமதமாகவே வருகின்றன. இதற்குக் காரணம் எமது வேலைப் பழுதல்ல மாறாக பொருளாதாரப் பிரச்சனையே. அத்தோடு பத்திரிகை வடிவத்தில் வந்த சுமைகள் தற்போது சஞ்சிகைவடிவில் வெளிவருகின்றது இதன் மூலம் நாம் பணத்தை மிகுதிப்படுத்த முடியும் என்பதாலே.

இதைவிட இன்று யாழ்நகர் இராணுவத்தினரின் கட்டுப்பாட்க்குள் உள்ளது. இதற்கு அடிப்படைக் காரனம் பூர்சுவா வர்க்கத்தினால் தமது நலன் கருதி ஆரம்பிக்கப்பட்ட போராட்டம் என்பதேயாகும். அதாவது தமது சந்தைப்படுத்தலுக்கு தடையாக சிங்கள பூர்சுவா வர்க்கம் எள்ளது என உணர்ந்த இவர்கள் தமக்கு என தினிச் சந்தை ஒன்றை உருவாக்க முற்பட்டனர். ஆதலால் அதற்குஒரு தனிநாடு அவசியமாயிற்று எனவே தான தழிமீழம் என்ற கோரிக்கையும் முன்மொழியப்பட்டது. அதைவிட தொழிலாளர்கள் இப்போராட்டத்தை ஆரம்பிக்கவில்லை. காரணம் அவர்களிடையே அக்காலத்தில்முதல்பிரச்சனையாக இருந்தது சாதிய ஒடுக்கு முறையேயாகும். அதைக்களைவதற்கு இவர்கள் பாடுபடும் காலத்தில் தான் தேசியவிடுதலைப் போராட்டம் வெடித்தெழுந்தது

**Redaksjon:**
**Sumaihal redaksjonskommite med dyktig støtte av A.Mari, T.siva, Ulrik, Gjølstad og Sturle D. Tvedt.**
**Produksjon og distribusjon:**
**Sumaihal aktivistgrupp Norge.**

**Layout og Produksjonsansvarlig:**
Henrik Ormåsen.
**Postadresse:**
P.boks 415
9001 Tromsø
வங்கிக் கணக்கிலக்கம்: 82454059545
சந்தா வருடம் 60 குரோணர்.
வெளிநாடுகள்: 10 Us $

# டானியல் மீதான சிவசேகரத்தின் விமதுசனம் குறித்து

காலச்சுவடு என்னும் இந்திய இதழில் திரு. சிவசேகரம் டானியலில் மார்க்ஸியமும், தாலித்தியமும் என்ற தலைப்பில் ஒரு கட்டுரை எழுதியிருந்தார். அது தினகரனிலும், பாரிஸ் ஈழநாட்டிலும் மாறுபிரசுரம் செய்யப்பட்டிருந்தது.

தமிழகத்தில் இன்று தலித் இலக்கியம் குறித்த பார்வை வளர்ந்து வருவதும், அதுகுறித்து எழுதுபவர்களும், பேசுபவர்களும் மறைந்த இலங்கை எழுத்தாளரான கே.டானியலை முன்னோடியாகக் கருதுகின்றனர். டானியலின் பெயரில் விருதும் வளங்கப்படுகிறது. டானியல் தன் எழுத்துக்களில் மிகவும் பிடிவாதமாக தலித் (தாழ்த்தப்பட்ட) மக்களின் அவலங்களை எல்லாவித ஞானபண்டிதர்களின் அவதூறுக்கும் அஞ்சாமல் எழுதியவர். தனித்தமிழ்வாதிகள் எதிர்பக்கம் நின்று பகிரங்கமாகவே அவதூறு செய்தனர். இழிசனர் வழக்கு, இலக்கியமாகாது என்றனர். 1950களின் இறுதியிலும், 1960களிலும் இடதுசாரி இயக்கம் இப்பிற்போக்கு கருத்துக்களை உடைதெறிந்தது.

டனியலின் எழுத்துக்கள் பிரபல்யமடையத் தொடங்கியதும் ஓய்ந்து போன குரல்கள் மீண்டும் வெவ்வேறு வடிவங்களில் விமர்சனம் என்ற பெயரில் தலை எடுத்தன. டானியல் உயர்சாதியினரை இழிவாக எழுதுகின்றார், குறிப்பாக உயர்குலப் பெண்களை இழிவுபடுத்துகின்றார் என்றேல்லாம் பதறினார்கள். இவற்றிற்கு டானியல் மிகவும் ஏழனமாகவும் எளிமையாகவும் பதிலளித்தார். இவற்றிற்கு நேரே முகம் கொடுக்க முடியாதவர்கள், மீண்டும் டானியல் சாதிப்பிரச்சனையை எழுதுகின்றார் என்றார்கள். அதற்கும் அவர் அணித்தரமான பதில் கூறினார்.

கே.டனியலின் நாவல் வரிசைகளில் கடைசியாக வெளிவந்தது பஞ்சகோணங்கள் என்னும் நாவல். இந்நாவல் குறித்தும், டானியல் மீதும் சிவசேகரத்தின் கட்டுரை அமைந்துள்ளது. இந்நாவல் டானியல் இறந்தபிறகு 8 வருடங்களுக்குப் பிறகு அச்சாகியுள்ளது. நாவலின் முன்னுரையை திரு அ.மாக்ஸ் எழுதியுள்ளார். டானியலுடன் தனக்கு ஏற்பட்ட அரசியல் விவாதங்களைப் பற்றி விபரமாக எழுதப்பட்டுள்ளது.

தலித் இலக்கியத்தை யார் எழுத வேண்டும் யாரால் முடியும் என்ற கேள்வியிலிருந்து கட்டுரை ஆரம்பமாகிறது. கட்டுரையின் மையநோக்கம் டானியலை கடுமையாகத் தாக்குவதாகவே உள்ளது. தாக்குதலின் வேகம் சிவசேகரத்தை பல இடங்களில் இடறவும் வைத்துவிட்டது. கட்டுரையில் சிவசேகரம் எழுதிய சிலவற்றைப் பார்ப்போம்.

1. சாதியத்தின் கொடுமையை உணர்ந்த கொடுமையான சம்பவங்கள் கூறப்படுவது சாதியத்தின் அன்றாடக் கொடுமையின் முக்கியத்துவத்தை மழுங்குபடுத்துகிறது என்று எழுதியுள்ளார்.

உலகில் வேறெங்கும் காணமுடியாத கொடுமையான அமைப்பே சாதியமைப்பு. இங்கே ஒருவன் பிறக்கும் போது சாதியுடன் தான் பிறக்கின்றான். தன் வாழ்நாளில் நல்ல நடத்தையாலோ பழக்கவழக்கத்தாலோ அதனை மாற்றி விட முடியாது. மனிதன் நாகரீகம் அடைந்துவிட்டான் என எண்ணுபவர்கள் வெட்கித் தலைகுனியும் அளவுக்கு சாதிக்கொடுமைகள் இன்னும் நடைபெற்று வருகின்றன. தம்படுக்க மறுத்த தாழ்த்தப்பட்டவரின் கட்டைவிரல் வெட்டு 1991இல் சுண்டூர் (ஆந்தராப் பிரதேசத்தில் உள்ளது) படுகொலைகள் போன்றவை என பல உதாரணங்களைக் கூறலாம். தாழ்த்தப்பட்டமக்கள் உரிமைக்குரல் கொடுப்பதையும் மதிப்பையும் பெறப் பொராடுவது உயர்சாதினரால் ஆத்திரம் ஊட்டும் செயல் என வர்ணிக்கப்பட்டு வருகின்றது. நிலைமைகள் இப்படியிருக்க டானியல் நாவலில் மிகைப்பட எழுதி சாதியத்தின் கொடுமைகளில் முக்கித்துவத்தை குறைத்துவிட்டாராம்!

2) **தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கம் தனது தக்குதலின் இலக்காக கொண்டது சாதிய அடிப்படையிலான ஒடுக்கு முறையே அன்றி ஒடுக்கும் வர்க்கத்தின் சாதியினர் அனைவரையும் அல்ல. இவ்வகையில் இந்த இயக்கம் டானியலைவிட பெருமளவுக்கு மார்க்சிய, லெனினிய சிந்தனைக்கு நெருக்கமாக நின்றது** என சிவசேகரம் எழுதுகிறார். இது முழப்பூசணிக்காயை சேற்றில் மறைப்பதாகும். ஒடுக்கும் சாதியினர் அனைவரையும் டானியல் தாக்குகிறார் என்று எழுதுவது டானியலுடன் இயங்கிய தோழர் அனைவரையும் இழிவுபடுத்துவதாகும். இப்படி எழுதுவது அயோக்கியத்தின் உச்சத்தை காட்ட பயன்படுமேயன்றி உண்மைக்கு ஒருசதவீதம் தன்னும் உதவாது. 1960களில் கம்யூனிஸ்ட் கட்சியில் பிளவு வந்தபோதும் தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கம் ஆரம்பித்த போதும் டானியல் மிக முக்கிய பங்கை ஆற்றினார். ஆக இந்த இயக்கங்கள் மார்க்ஸிய, லெனினிய சிந்தனைக்கு மிக நெருக்கமாகவே நின்றது. டானியலை இந்த இயக்கங்களில் இருந்து பிரிப்பது வரலாற்றுப் பொய்யாகும். இது இலங்கைப் புதிய ஜனநாயகக் கட்சியினருக்கு மட்டும் நன்றாகப் பயன்படும் என எண்ணுகிறேன்.

மேற்குறிப்பிட்ட டானியலின்

நாவலான **பஞ்சகோனங்கள்** *1980* களில் ஆரம்பகால சம்பவங்களை வைத்து எழுதப்பட்ட நாவல். தாழ்த்தப்பட்ட மக்கள் (தோட்டங்களில் கூலி வேலை செய்பவர்கள்) போத்தலில் தேநீர் குடிப்பதை எதிர்த்து கிளாசில் குடிப்பதற்கு ஆரம்பித்த போராட்டமாகும். கிளாசில் தேநீர் கொடுத்தால் தமது மரியாதை போய்விடும் என்று உயர் சாதிஎன செல்லிக் கொள்பவர்கள் பொங்கினார்கள். அக்காலத்தில் (1981, 82) தமிழ் விடுதலை இயக்கங்களின் வளர்ச்சி ஆரம்ப நிலையில் இருந்தது. இப்போராட்டத்தை ஆரம்பித்த இளைஞர்களில் நானும் கலந்து கோண்டேன். அப்போது இது **தமிழர்களை பிரிக்கும் போராட்டம்** என்று ஒரு சில இயக்க நபர்களால் பலதடவை செல்லப்பட்டது. **இப்போது (தமிழீழம் கிடைக்குமுன்) எமக்குக் கிடைத்த அங்கீகாரம் தமிழீழம் கிடைத்தபின் கிடைக்கும் என்பதற்கு என்ன உத்தரவாதம்?** என நாம் திரும்பிக் கோட்டோம். அப்போராட்டம் நடைபெற்றபோது டானியல் எமக்கு ஆதரவளித்தார். உடல் சுகயீனம் உற்றபோதும் நீண்ட துரம் பயணம் செய்து எம்மைச் சந்தித்தார். உற்சாகம் தந்தார். இதே போராட்டம் புன்னாலைக் கட்டுவனில் உக்கிரம் அடைந்த போது அங்கு அவர் கலந்து கொண்டார். இங்கு நடந்தவைகளே நாவலில் குறிப்பிடப்பட்டுள்ளது. அங்குதான் **வில்லன்களாக** இழையதம்பியும், அவரது புதல்வர்களும் வெளிப்பட்டனர். நாவலில் வரும் பாத்திரம் பலருக்கும் தெரிந்தவை. ஆக இது கற்பனையல்ல. இதுபற்றி பலமுறை டானியல் எழுதியுள்ளார். இவை சிவசேகரத்திற்கு தெரியாததற்கு டானியல் பொறுப்பல்ல. களத்தில் நின்றவர்களில் சிலர் லண்டனில் உள்ளனர் தேவையாயின் கேட்டு அறிந்து கொள்ளலாம் சிவசேகரம் அவர்களே.

3) **உயர்சாதிப் பெண்களுடன் தாழ்த்தப்பட்ட சாதி ஆண்கள் வைத்துள்ள உறவு பற்றி ஒருவிதமான பழிவாங்கலாகவே டானியல் எழுதுகிறார்** எனக் குறிப்பிடுகிறார். தாழ்த்தப்பட்ட பெண்களை உயர்சாதி ஆண்கள் தமது இச்சைக்குப் பயன்படுத்துவது, வைப்பாடிகளாக வைத்திருப்பதைப் பற்றியும் டானியல் பலஇடங்களில் எழுதியுள்ளாரே. தாழ்த்தப்பட்ட பெண்கள் உயர்சாதி ஆண்களுக்கு வைப்பாட்டியாக இருப்பதில் கௌரவம் உண்டா? இதுபற்றியும் டானியல் எழுதியுள்ளாரே. சிவசேகரத்திற்கு இது உறைக்கவில்லை. உயர்சாதிப் பெண்களுக்கு வக்காளத்து வாங்கும் சிவசேகரம் தாழ்ந்த சாதிப் பெண்கள் மீது ஒடுக்குமுறை வரும்பொது விலகி நிற்கிறார். விமர்சன மூளைக்கு இது எட்டவில்லை. உயர்சாதிப் பெண்களுடன் தாழ்த்தப்பட்ட சாதி ஆண்கள் கொண்ட உறவுகளை டானியல் எழுதிவிட்டாரே என்ற கோபம் தான் கண்ணை மறைத்துவிட்டது. இந்து தாழ்த்தப்பட்ட, உயர்ந்த சாதி ஆண்,பெண் உறவுகளைப்பற்றி பழிவாங்கல்கள் என்ற நோக்குடன் டானியல் எழுதவில்லை என்பதே உண்மை. **காதல் தேவைக்கு ஏற்றபடி வளைந்து நெளிந்து போகக்கூடியது இங்கு தெய்வீகம் என்று ஒன்று கிடையாது** என டானியல் கூறுவார். டானியல் இந்த ஆண், பெச் உறவுகளைப்பற்றி எழுதிய போலித்தனங்களை, பெய் வேசங்களை தோலுரிக்கவே ஒழிய எழுதி யாரையும் பழிவாங்கவல்ல. ஆயினும் நடந்த உண்மைகளைத் தான் எழுதுகின்றார்.

இல்லை, இப்படிப் பழிவாங்கலாகவே டானியல் உயர்சாதிப் பெண்களைப்பற்றி எழுதினார் என்றால் மு.தளயசிங்கத்தைவிட மோசமாக ஒன்று எழுதவில்லை. மற்றப்படி ஒழுக்கம், பண்பாடு, பக்தி இத்யாதிகளை உயர்த்திப்பிடிக்கும் உயர்சாதியினரை அம்பலப்படுத்தி விம்டாரே டானியல் என்பது கோபமாக இருக்கலாம். கற்பு, ஒழுக்கம், நாகரீகத்தைப் போதித்தவர்களைத்தான் தளையசிங்கம், டானியல் இன்னும் பல எழுத்தாளர்கள் அம்பலப்படுத்தியுள்ளனர். தாழ்த்தப்பட்ட பெண்கள் ஆண்களுடன் சேர்ந்து உழைப்பது, கள் அருந்துவது, சுருட்டுப்புகைப்பது, கணவனை உரிமையுடன் நீ என அழைப்பது போன்ற வற்றில் ஜனநாயகத்தைக் கடைப்பிடிக்கின்றனர். இது எமது யாழ்பாண சமூகநிலமை. இதையும் டானியலின் நாவலில் காணலாம். உயர்ந்த தாழ்ந்த ஆண்பெண்கள் உறவுபற்றி எழுத யாழ்ப்பாண இலக்கியவாதிகள் இல்லை எனினும் அளவிற்கு இது இலக்கியத்திற்கு பயன்பட்டுள்ளது என்பது உண்மை. ஆயினும் உயர்சாதி ஆண்களால் தாழ்த்தப்பட்ட பெண்கள் வைப்பாட்டிகளாகவும் உயர்சாதிப் பெண்களால் தாழ்ந்த சாதி ஆண்கள் தமது ஆசையைத் தீர்ப்பவர்களாகவும் பயன்படுத்தப்பட்டனர் என்ற உண்மை டானியல் தனது படைப்புகளில் பதிவு செய்துள்ளார்.

4) **பஞ்சமர் ஒருவர் முதலாளியினால் டானியல் அவரை எவ்வாறு கருதக் கூடும் என்பது அவரின் எழுத்தில் வெளிவரவில்லை.** என்கிறார் சிவசேகரம். ஒரு நாவலிலோ சிறுகதையிலோ உள்ளத்தில் உள்ள சகல பிரச்சனைகளுக்கும் தீர்வு செல்ல வேண்டும் என்கின்ற போலி முற்போக்கு வாதத்தின் சாரம்தான். இந்த விடையம் டானியல் தொட்ட நாவலின் கருவிற்கு அப்பாற்பட்டது.

பட்டப்படிப்பினாலோ, பொருளீட்டு உயர்வதினாலோ தாழ்த்துப்பட்ட மக்களின் கருத்தை வெண்றேடக்கலாம் என்ற கருத்தின் எதிரிகாகவே டானியல் விளங்கினார். தாழ்த்தப்பட்ட மக்களும் நல்லெண்ணம் கொண்ட உயர்சாதியினரதும், ஏனையோரினதும் ஆதரவுடன் போராடியே உரிமையைப் பெறலாம்என்ற பக்கம் நின்றவர் டானியல். இதன் அடிப்படையிலே தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கம் இயங்கியது. தாழ்த்தப்பட்டவர் என்பதற்காக ரீ.ராஜலிங்கத்தை (முன்னாள்

உடுப்பிட்டித் தொகுதி மாராளுமன்ற உறுப்பினர்) டானியல் ஏற்றவர் அல்ல. டானியல் ராஜலிங்கத்தை எதிர்த்தவர் என்பது எமக்குத் தெரியும். தமழ்த்தப்பட்டவர் என்ற காரணத்திற்காக யாரையும் கண்மூடித் தனமாக ஆதரித்தவரில்லை. இல்லை அப்படித்தான் என எழுதுவது நயவஞ்சகமானது.

5) **டானியல் எழுத்துக்கள் அமரகாவியமல்ல** என சிவசேகரம் குறிப்பிடுகிறார். ஆயினும் டானியலின் படைப்புக்கள் தமிழ் இலக்கியத்தில் குறிப்பிடத்தக்க இடம் பிடித்தவை. அமரகாவியம் படைக்க தகுதி வாய்ந்த ஞானபண்டிதர்கள் எவரும் தாழ்த்தப்பட்ட மக்களின் பிரச்சனையை எழுதவில்லையே ஏன்? அமரகாவியங்களுக்கு பாத்திரமாகும் தகுதி தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இல்லை என அவர்கள் நினைத்திருக்கலாம்.

6) **மார்க்சிய லெனினிய வாதிகள் சுயநிர்ணயம் என்ற அளவிலும் இன ஒடுக்குதலுக்கு எதிரான எழுச்சி என்ற வகையிலும் அரசபடைக்கு எதிரான போராட்டத்தை ஏற்கின்றனர். டானியலின் தயக்கம் சாதியத்தைப் பிரதான முரண்பாடாக கருதுகின்ற விளைவாகவே தெரிகிறது** என்ற கூற்று சம்மந்தமாக சில விடையங்களைக் குறிப்பிடலாம்.

தமிழ் முக்களின் விடுதலைப் போராட்டம் 1983ற்குப் பிறகு தீவிரமாக வளர்ந்து. 1985 அளவில் ஈரோஸ் இயக்கத்தினர் தமது கோசமான **நாம் ஈழவர், நமது மொழி தமிழ், நம் நாடு ஈழம்** என்பதைக் கண்டித்து கூட்டணியின் தளபதி அமிர்தலிங்கள் **நாங்கள் ஈழவர் அல்ல, தாழ்த்தப்பட்டவர்கள் அல்ல, ஈழவர் என்பது கேரளாவில் மரம் ஏறம் சாதியினர்** என்று எதிர் அறிக்கை விட்டு புரளியைக் கிளப்பினார். சாதி எதிர்ப்பு குறித்து தமிழர் விடுதலைக் கூட்டணியின் பார்வை யாவரும் அறிந்ததே. விடுதலை, மார்க்சியம், சோசலிசம் பற்றி நிறையக் கதைத்த ஈரோஸ் இயக்கத்தின் **தோழர் சுந்தர்** என அறிப்பட்ட கியி அரவிந்தன் தான் தாழ்த்தப்பட்டவன் என்பதற்காக பஸ்தியாம்பிள்ளை முதல் ஈரோஸ் தலைமைப் பீட நபர்களால் தனக்கேற்பட்ட அவமானம் பற்றி மௌனம் பத்திரிகையில் எழுதிவந்தார். இவர் தமிழ் தேசியவாதி (இவர் பற்றி பலவிமர்சனங்கள் உண்டு). இப்படி எல்லா இயக்கங்களுக்குள்ளும் இருந்திருக்கலாம். சில உண்மைகள் வெளிவந்துள்ளன. 1984ல் தீண்டாமை ஒழிப்பு இயக்கத்தின் தலைவராக இருந்த திரு க. கிருஷ்ணபிள்ளை ஆசிரியரை ரெலோ இயக்கத்தினர் **நாங்கள் துவக்கு எடுத்துவிட்டோம் இனி என்ன செய்யப் போறியள்?** என்று கேட்டனர். 1985ல் மண்டான் என்ற கிராமத்தில் (வடமாராட்சி) ரெலோ இயக்கத்தினரால் தாழ்த்தப்பட்ட மக்கள் தாக்கப்பட்டனரே. 1987ல் சங்கானையில் இராணுவ தாக்குதலுக்கு அஞ்சி புலம்பெயர்ந்த தாழ்த்தப்பட்ட மக்கள் நன்னீர் கிணற்றில் நீர் அள்ளக்கூடாது என்பதற்காக உமி போடப்பட்டதாமே? இராணுவ அநீதிக்கு எதிராக எழும் துவக்கு தமிழருகஇகு அநீதி வரும்போது ஏன் எழுவதில்லை.

ஆக டானியல் இதை முக்கியமான பிரச்சனையாகக் கருதியது புரிந்து கொள்ளக் கூடியதே. சாதிக் கொடுமைபற்றி புத்தகத்தில் படித்து புரிந்து கொள்ள முடியாது.தலையிடியும் காச்சலும் தனக்கு வந்தால்த்தான் புரியும் என்பார்கள் கறுத்தப் பண்றி ஊத்தை நாய் என்று தமிழர்களைப் பார்த்து நாஜிகள் கூச்சலிடும் போது அந்த உணர்வைப் புரிந்து கொள்ளலாம் என நினைக்கின்றேன்.

7) **டானியலின் இலக்கியத்தை விட அவரின் மார்க்சியத்தின் குறைபாடுகள் பாரியவை** என எழுதும் சிவசேகரம் எந்த மார்க்சிய இயக்கத்திலும் இனைந்து செயற்பட்டவரல்ல. (ஆதாரம் சஞ்சீவி) தனது சுயநலத்துக்காக மார்க்சியத்தைப் பயன்படுத்துபவர்களில் ஒருவர். மார்க்சிய எதிர்ப்பு பத்திரிகையில் நின்று மார்க்சிய வாதிகளை விமர்சிக்கும் இவர் தங்களை மார்க்சிய லெனினிச ஆதரவாளர்கள் என நேர்மையாக எழுதும் இளைஞர்களால் நடாத்தப்படும் செம்மஞ்சள் ஏடு என இழிவுபடுத்துவது குறிப்பிடத்தக்கது.

ஈழப்போராட்டம் பற்றி டானியல் தனது பார்வையைய எங்கும் ஒழித்தது கிடையாது. தனது சமூக அரசியல் பின்னணியில் இருந்து அதை மிகவும் துணிச்சலாக விமர்சித்தார். ஆனால் டானியலை விமர்சிக்கும் சிவசேகரம் தமிழியக்கங்கள் குறித்து தனது விமர்சனத்தை முன்வைக்காததன் காரணம் சந்தர்ப்பவாதமே ஒழிய வேறல்ல. இதற்கு நேர் எதிர் பக்கம் நின்றவர் டானியல்.

பேராசிரியர்கள் (பெயர்–ஆசிரியர்கள்), கலைஞர்கள், கவிஞர்கள், விமர்சகர்கள், படிப்பாளிகள் என பம்மாத்துவிடும் நபர்கள் மத்தியில் டானியல் தான் சார்ந்த இயக்கத்திற்கு விசுவாசமாகவே நடந்து காட்டினார். கட்டுரை ஆரம்பத்தில் தலித் இயக்கம் யாரால் எழுதப்படவேண்டும் என்ற கேள்வியுடன் தொடங்குகிறது. யார் தான் தலித் பிரச்சனையை எழுதினாலும் தலித் எழுதுவதைப்போல் இயல்பாக அமையாது என்பது உண்மை. ஆயினும் தலித்தாக தன்னை உணரும் ஒருவராலும் அது முடியும.

ஐரொப்பாவின் சிறுபாண்மை இனமான ஜிப்சிகள் பற்றி 10 வருடம் அவர்களுடன் பயணம் செய்து மிக அருமையான நூல் ஒன்றை எழுதினார் துயுலேழுழுசுளு என்ற பெல்ஜியக்காரர். ஜிப்சிகள் எல்லா அரசுகளாலும் வஞ்சிக்கப்பட்டார்கள். இவர்கள் நாஜிகளால் வேட்டையாடப்பட்டனர். மற்றும் ஜேர்மனி எழுத்தாளரான புரவெநச றயடடசயக என்பவர் 1983–85 வரை ஒரு வெளிநாட்டுத் தொழிலாளி போல (துருக்கியராக) வேசம் போட்டு ஒரு தொழிற் சாலையில் கடுமையான வேலை செய்தார். ஜேர்மனியரால் எவ்வாறு ஒரு வெளிநாட்டுத் தொழிலாளி நடத்தப்படுகிறார் எப்படி அவர்களை

ஜேர்மனியர்கள் இழிவு படுத்துகின்றனர் என்றெல்லாம் எழுதி அடிமட்டத்தில் புத்தகம் வெளியிட்டார். அவை ஜேர்மனியரை கதிகலங்க வைத்தது. தற்போது ஜப்பானில் ஈரான் தொழிலாளியாக வேலை பார்த்தது பற்றி நூல் வெளியிட்டுள்ளார். எங்கள் அறிவு ஜீவிகளுடன் மேற்குறிப்பிட்ட நபர்களை எண்ணிப்பாருங்கள். பகவத்கீதையில் மார்க்சியம் உண்டா?, அல்லது பாரதி தொழிலாள வர்க்க சார்பாணவரா?, பாரதி ஒரு பொதுஉடமை வாதியா? போன்றவை பற்றியும் ஆறுமுகநாவலருக்கு விழா எடுப்பதிலும் அறைப்படிப்பாளிகள், போலி முற்போக்கு வாதிகள் தாங்கள் வாழ்நாளை செலவழிக்கும் பம்மாத்து பேர்வழிகள் ஒரு கூலித் தொழிலாளியாக வேலைக்குப் போவார்களா? சாதிக் கொடுமையை ஆனுபவித்து இவர்கள் ஏன் எழுதமுடியாது? சாதியமும் அதற்கெதிரான போராட்டமும் என்ற நுலைப்படித்துவிட்டு வாயு, பஞ்சமர் பாட்டு என்ற 2 கவிதைகளை எழுதியதாக சிவகேரம் (தேவி எழுந்தாள் முன்னுரையில்) குறிப்பிட்டுள்ளார். டானியல் சாதிக் கோடுமையை புத்தகத்தில் படித்து அறிந்தவரல்ல. சாதிக் கொடுமைகளை தானும் அனுபவித்து, மற்றவர்கள் அனுபவித்ததையுங் கண்டு கொதித்தவர். அதை எதிர்த்து போராட்டங்களில் ஈடுபட்டவர்.

இலங்கைத் தாழ்த்தப்பட்ட மக்களின் வரலாறு ஒழுங்காக, சரியாக எழுதப்படவில்லை என்பது மறைந்த முன்னாள் தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத்தின் தலைவரான திரு எஸ்.ரி.என் நாகரத்தினம் அவர்களின் மனக்குறையாகும். இந்த வரலாற்றுப் பணியை கே. டானியல் தன்னால் முடிந்தளவு துணிந்து பதிவு செய்துள்ளார். டானியலின் நாவல்கள் யாழ்பாணத்தின் ஒரு குறிப்பிட்ட கால வரலாற்றை பிரதிபலிப்பவை. மானுடவியல் ஆய்வுக்காக இவரது படைப்புக:களை ஜப்பானிய பல்கலைக்கழகம் எடுத்துக் கொண்டுள்ளது.

சிவசேகரம் எழுதிய கட்டுரையின் இறுதியில் யாரும் செய்யத் துணியாத ஒன்றை டானியல் செய்திருக்கிறார் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை. சிவசேகரம் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் உண்மையும் அதுவே.

1993ல் வெளிவந்த இலங்கைத் தமிழ் நாவல்கள் ஒரு மதிப்பீடு என்ற தலைப்பில் (சரிநிகர் 18-31 மே 1995) திரு எம்.ஏ.நு∴மான் கீழ்வருமாறு எழுதுகிறார். ....... தாமரைச்செல்வியின் தாகம் இவ்வாண்டில் வெளிவந்திருக்காவிட்டால் 1993ல் வெளிவந்த சிறந்த நாவலாக கே.டானியலின் பஞ்சகோணங்கள் சிலவேளை தெரிவுசெய்யப்பட்டிருக்கும்.

டானியல் பட்டப்படிப்பு படித்தவரோ அல்லது அறையிலிருந்து வெறும் புத்தகங்களை மாத்திரம் படித்தவரோ அல்ல. மாறாக சிறுவயதில் இருந்து கூலிவேலை செய்து அதன் கஸ்டங்களை அறிந்து ஒடுக்கப்பட்ட மக்கள் சார்பாக நின்ற இயக்கங்களுடன் தன்னை ஒளிவு மறைவின்றி காட்டி இயங்கியவர். அதனால் ஏச்சுக்கும், பேச்சுக்கும் ஏன் பொலீஸ் அடிக்கும் உட்பட்டு தான் நின்ற கட்சிக்கும் மக்களுக்கும் விசுவாசியாக தனது கடைசிக் காலம் வரை வாழ்ந்தவர். ஒன்றிலும் கலந்து கொள்ளாதவர்கள் அவரையும், அவரது இலக்கியத்தையும் விமர்சிப்பது அதிசயமானது தான். இவ் அறிவுஜீவிகள் மேடையில் தமது புலமையைக் காட்ட ஆய்வுக்கட்டுரைகள் வாசித்ததைத் தவிர வெறோன்றும் செய்தது கிடையாது என்பதே நாம் கண்ட உண்மை.

# இன்று காட்டிக் கொடுக்கும் பணியில் தமிழர்களின் பிரதிநிதிகள்

இன்று தமிழர்களின் பிரதிநிதிகள் என தம்மைத் தாமே கூறிவருகின்ற புலிகள் தற்போது தமக்கு வேண்டப்படாதவர்களை ஐரொப்பிய அரசுகளிடம் காட்டிக் கொடுக்கும் சம்பவங்கள் ஆங்காங்கே நடைபெற்ற போதிலும் இவர்கள் தான் என ஊயிதம் செய்ய முடியாத நிலை இருந்தது. ஆனால் ஒருசில வாரங்களுக்கு முன் நடைபெற்ற ஒரு காட்டிக்கொடுப்பின் மூலம் இது இவர்கள்தான் செய்கின்றனர் என நிருபணமாகியுள்ளது. இவர்களின் இவ்நடவடிக்கையானது தற்போது புலம்பெயர்ந்த மக்களை பீதியடையச் செய்துள்ளது. இதுதோடர்பாக காட்டிக்கொடுப்பு நடந்த இடத்தின் தற்போது நிலைபற்றியும், காட்டிக்கொடுப்பு எவ்வாறு நடைபெற்றது என்பது பற்றியும் விரிவாக கீழே பார்ப்போம்.

1987 களில் நோர்வேயின் வடதுருவத்தில் இருக்கும் இடமான வார்டோவிற்கு குடிபெயர்ந்த தமிழர்கள் சிலராக இருந்தாலும் அது காலப்போக்கில் அதிகரித்து வந்தது. 1990களில் அங்கு வாழ்ந்த தமிழர்களின் எண்ணிக்கை 55க்கும் (சிறுவர்கள் உட்பட) அதிகமாகும். இக்காலத்தில் குடிபெயர்ந்த தமிழர்கள் தமது கலைகாலாச்சாரங்களைப் பேனும் பொருட்டும் பலவழிகளில் பாதிக்கப்பட்ட தமிழர்களின் மனேநிலையை சீர்செய்யும் முகமாகவும், தமிழர்களுக்கு இடையேயான கருத்து முரன்பாடுகளை (இயக்கரீதியான) களையும்பொருட்டும் ஓர் தமிழ்சங்கம் உருவாக்கப்பட்டது. இது 1990 இல் 55 அங்கத்தவர்களுடன் ஆரம்பித்த இத்தமிழ் சங்கமானது 1995 இறுதியில் 200க்கும் மேற்பட்ட அங்கத்தவர்களை தன்னகத்தே கொண்டிருந்தது.

இச்சங்கத்தில் இலங்கையின் பல்வேறு பாகங்களிலும் இருந்து வந்தவர்கள் அங்கத்தவர்களாக இருந்தனர். பல அரசியல்

கருத்துக்களைக் கொண்டிருந்தவர்கள் தமிழ் சங்கத்தில் இருந்ததால் இச்சங்கம் புலிகளின் பக்கசார்பாக இயங்குவதை பலதடவை கண்டித்த மாற்றுக் கருத்துள்ளவர்களின் கருத்தை ஏற்க மறுத்ததன் விளைவு இன்று புதிய மனித உரிமைகள் குழுவேன்று உருவாக்கியுள்ளது.

மாற்றுக் கருத்துக்களை ஒரு கருத்தாக ஏற்காது மற்றய இயக்கங்களின் பெயரைச்செல்லி அவற்றின் துரொகத்தை மக்கள்மத்தியில் அம்பலப்படுத்துவது போலவும் தமது கருத்து ஒன்றுதான் தமிழர்களின் உரமைப்போருக்கான தலைசிறந்த கருத்து எனக் கூறிவரும் புலிகளின் சகபாடிகள், அமைப்பாளர்கள் அதே பாணியை தமிழ் சங்கத்தினுள்ளும் புகுததுதிவந்தனர் (இது வார்டே தமிழ் சங்கத்தில் மட்டுமல்ல பல தமிழ் சங்கங்களிலும் காணணப்படுகின்றன) இதனை எத்தனைகாலம் தான் மக்கள் பொறுக்கமுடியும். அதாவது நாட்டிலே வலிகாமத்தை இராணுவம் முற்றுகை இடும்போது தமது விடுகளை விட்டு வெளியேறும்படி கூறிய புலிகளை உதைத்து அனுப்பியவர்களும் நாட்டில் உள்ளபோது ஒரு கருத்துக்கு சுதந்திரம் உள்ள இந்நாட்டில் இவ்வாறான கருத்துக்களை வளரவிடாது கருத்துச் சுதந்திரத்திற்காகப் போரடும் கட்டாயம் தற்போது பல தமிழ்சங்ககங்களுக்கு ஏற்பட்டுள்ளதன் விளைவே இன்றைய புதிய மனித உரிமைகள் குழுவின் உருவாக்கமாகும்.

அதாவது மனிதநேயத்தை விரும்பும் சக்திகளின் கூட்டமைப்பு எனவும் இதைக்கூறலாம். இதற்கு நோர்வேயின் பலபாகங்களிலும் வசித்துவரும் தனிப்பட்ட நபர்களின் உதவியும் உற்றாசமும் வளங்கப்படும் அதேவேளை இதன் செயற்பாட்டினை விரிவு படுத்தும் நோக்குடன் நோர்வேஜிய சமுகத்திலும் முற்போக்கு கருத்துள்ளவர்களை இனைத்து சில செயற்பாடுகளை செய்யமுனைகின்றனர். இவ்வாறு செயற்பட முனையும் இச்சங்கத்தின் முக்கிய உறுப்பினர் ஒருவருக்கு (இச்சங்கத்திற்கு மொழிபெயற்பாளராக இருப்பவர்) தான் இந்த அனியாயம் நடந்தது.

அதாவது இவர் இலங்கையர் இல்லை எனவும். இவரின் தாய்நாடு இந்தியா எனவும் கூறியதுடன் இவர் தற்போது வைத்திருக்கும் மானிதாபிமான அடிப்படையிலான வதிவிட அனுமதிக்கான வாக்கு மூலம் பிழையானது எனவும் கூறியுள்ளனர். இதைச் செய்தவர்கள் வேறுயாரும் இல்லை தற்போது வார்டேவில் தமிழ்சங்கப் பிரதிநிதிகள்தான். இதுபற்றி விசாரிப்பதற்காக ஒஸ்லோவில் இருந்து ஒருபொலிஸ் அதிகாரியும் தமிழ் மொழிபெயற்பாளரும் விசேடமாக வார்டோவிற்கு வந்திருந்தனர். இவர்களால் இவரிடம் பலகேள்விகள் கேட்கப்பட்டது. குறிப்பாக இவர் இலங்கையர்தான என்பதை அத்தாட்சிப்படுத்தும் வகையில் இலங்கையின் பலபாகங்களையும், மாற்று மொழியான சிங்களத்தையும் கதைக்கும்படி நிற்பந்திக்கப்பட்டார் இவர் இலங்கையரா இல்லையா என்பதை உறுதிப்படுத்தும் விசாரனையின் முடிவு இதுவரை அறிவிக்கப்படவில்லை. ஆனால் துரோகத்தனம் புரிந்தவர்களின் ஆசை நிறைவுபெறுமா இல்லையா என்பது கேள்விக்குறியே. அதேவேளை இதை புலிகள் தான் செய்தனர் என பாதிக்கப்ட்ட நபர் பலருக்கு குறிப்பிட்டதன் விளைவாக வாட்டோ புலிகளின் பொறுப்பாளர் பாதிக்கப்பட்ட நபரைச் சந்தித்து இவ்வாறு யார் கூறியது என விசாரிக்கும் பட்சத்தில் பாதிக்கப்பட்ட நபர் இது உனக்குத் தெரியாமல் நடந்திருக்க சாத்தியம் இல்லை எனக்குறிப்பிடுகையில் புலிப்பொறுப்பாளர் ஒன்றும் கதையாமல் தலையைக் குனிந்தபடி இடத்தைவிட்டு நகர்ந்தது குறிப்பிடத்தக்கது.

இன்று தமிழீழப் போராட்டத்தைக் காட்டிக் கொடுத்தபடி உள்ள இயக்கங்களை நாம் தமிழினத்தின் துரொகிகள் என அழைக்கின்றோம். அதேவேளைை இவ்வாறு புலம்பெயர்ந்தநாடுகளில் மாற்றுக் கருத்துடையோரைக் காட்டிக்கொடுக்கும் இவர்களை என்னவேன்று அழைப்பது என்பதை மக்களாகிய உங்களிடமே விட்டுவிடுகிறோம்.



# 50 ஆண்டுகளின் பின் இன்றைய உலகம்.

தற்போது உலகம் முழுவதிலும் ஏதோ ஒருவிதத்தில் ஆர்ப்பாட்டங்களும், ஊர்வலங்களும் நடந்த வண்ணம் இருகின்றது. 50 வருடங்களுக்கு முன் நாசிசம் அழிக்கப்பட்டு விட்டதாக கூச்சலிட் இவ்வேகாதிபத்திய அரசுகளில் தற்போது மீண்டும் அது தலைதூக்கி வருவதனை கண்டிக்கம் முகமாகவும், 50 வருடங்களுக்கு முன் வீசப்பட்ட அணுகுண்டின் நாசம்பற்றி யப்பானும், மற்றும் உலக நாடுகளும் அனுதாபங்களையும் கண்டனங்களையும் அதனால் மனித குலத்துக்கு ஏற்பட்ட அழிவுகளையும் நினைவு கூறும் முகமாகவும், பிரான்சின் அணுக்குண்டுப் பருசோதனை பற்றி பல பச்சைக் கட்சிகளால் நடாத்தப்படும் கண்டனங்களையும் உலகிற்கு தெரியப்படுத்தும் முகமாக ஆர்ப்பாட்டங்களும், ஊர்வலங்களும் நடைபெற்று வருகின்றன. இவை அனைத்தும் தற்போது உலகில் வளர்ச்சி அடைந்த நாடுகளில் உருவாகியுள்ள பிரச்சனைகள் என்பதால் உலகின் பலபாகங்களுக்கம் தெரியக்கூடியதாகவுள்ளது. ஆனால் வளர்ச்சி அடைந்து வரும் நாடுகளில் நடக்கும் யுத்தங்களும், போர்களும் உலக மக்களின் பார்வைக்கு கடுகிலும் விடச் சிறியதாகவே தென்படுகின்றது.

எமது நாட்டிலும் நடக்கும் தற்போதைய யுத்தம் மற்ற நாடுகளுக்கோ அல்லது புலம் பெயர்ந்து வாழும் தமிழர்களுக்கோ அங்கு என்ன நடக்கின்றது என்பது பற்றி தெழிவாகத் தெரிவதில்லை. அங்கு யுத்தம் நடக்கின்றது என்பதைக் கூட சிலர் அலட்டிக் கொள்வதாகவும் இல்லை. ஆனால் சந்திரிக்காவால் ஆரம்பிக்கப்பட்ட முன்னோக்கிப் பாய்தல் என்ற யுத்தத்தின் மூலம் அரசாங்கம் அதிகமான இடங்களைக் கைப்பற்ற முயற்சித்து வருகின்றது. இதனடிப்படையில் யாழ்நகர் மீது செல் தாக்கதல்களை கண்மூடித்தனமாக நடத்தி வருவதினால் பல்லாயிரக் கணக்கானோர் அகதிகளாக பாதுகாப்பாண இடம் என தாம் கருதும் இடங்களுக்கு இடம் பெயர்ந்துள்ளனர். அதேவேளை சந்திரிக்காவின் தாக்குதலைச் சமாளிக்க புலிகள் முயன்ற போதிலும் புலிகளிடம் உருவாகியுள்ள துரோகக் கும்பல் அவற்றைக் காட்டிக் கொடுத்த வண்ணம் உள்ளது. புலிகளிடம் தமக்குச் சார்பானவர்கள் உள்ளனர் என்ற துனிவில் போலும் தற்போது பாரிய தாக்குதல் ஒன்றையும் நடத்த அரசு திட்டமிட்டு வருவதாக இலங்கைச் செய்தி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. இவர்களது இத்தாக்குதல் வரப்போகும் மாரிகாலத்திற்கிடையில் நடத்தப்படலாம் எனவும் ஊர்ஜிதமற்ற தகவல்கள் தெரிவிக்கின்றன. புலிகளிடம் தோன்றியுள்ள துரோகக் கும்பல்களின் உதவி மூலம் புலிகளின் முகாம்கள் மீது தமது தாக்குலை விமானப்படையினர் நடத்திவருகின்றனர். இதைவிட புலிகளின் தாக்குதல் பற்றியும் உடனுக்குடன் அரசுக்குத் தெரிவதால் அவர்களின் தாக்கதலை கூட வெற்றீகரமாக நடத்தி முடிக்க இயலாத நிலை தற்போது புலிகளுக்கு உருவாகியுள்ளது. முன்ப ஒருதாக்குதலில் புலிகள் ஈடுபடுவார்களானால் எந்தவித உயிரிழப்பின்றியும், எப்பவாவது ஓர் இருவரை இழந்துமே தாக்குதலை நடத்தி வந்தனர் தற்போது அதற்க மாறாக அதிக உயிரிழப்பையும் தாக்குதலில் முழுவெற்றியின்மையையும் சந்தித்தவண்ணம் உள்ளனர்.

இதைவிட சந்திரிக்கா அரசு தற்போது செய்திகளை வெளிநாட்டு செய்தி இஸ்தாபனங்களோ அல்லது உள்நாட்டு செய்தி ஸ்தாபனங்களோ பெற்றுக்கொள்ள முடியாத வாறு செய்தித்தடைசெய்து விதித்துள்ளது. இதனால் தனது யுத்தம் பற்றியும், யுத்தத்தினால் ஏற்படும் பொதுசனங்கள் மீதான இழப்புக்கள் பற்றியும் எவரும் சரியாக அறிந்து கொள்ளாதவாறு இத்தடைச் சட்டம் வளிவகுத்துள்ளது.

புலிகளின் வரலாற்றில் ஒரு கறை படிந்தது போலவே மணலாறுச்சம்பவம். அதைவிட அவர்கள் இயக்கத்துக்குள் இருந்தே தாக்குதல் பற்றிய தகவல் இராணுவத்தினருக்கு கிடைத்ததென்பது தற்போது நடக்கும் யுத்தத்தை கேள்விக்குறிக்கு உள்ளாக்கியுள்ளது. எதையும் தந்திரமாகவும் இரகசியமாகவும் செய்து முடிக்கும் புலிகள் தமது இயக்கத்திற்குள் உருவாகியுள்ள துரேகக் கும்பலை எவ்வாறு அகற்றப் போகின்றனரோ?

இதேவேளை பல முற்போக்கு சக்திகளிடையே தமிழர்களுக்கு நல்வாழ்வுகிடைக்க வேண்டின் புதியதோர் ஈழவிடுதலைக்கான ஐக்கிய முன்னணி ஒன்று அவசியம் என்ற கருத்து உலாவிவருகின்றது. இதை நாம் ஏற்கத் தயாராகவில்லை. எம்மைப் பொறுத்தவரை இவ்யுத்தத்திற்குத் நிரந்தரத் தீர்வு ஒன்று உருவாக வேண்டின் இலங்கை வாழ் மக்களை ஒன்று திரட்டி அதன் ஒத்துழைப்புடன் தற்போதுள்ள அரசியல் தன்மைக் கெதிராக நடாத்தப்படும் யுத்தத்தினால் மட்டுமே தீர்வைக் காண முடியும். அதற்கு ஒரு கம்யூனிசக் கட்சி தலைமை தாங்கவேண்டும். இதைத் தவிர எந்த ஒரு தீர்வும் யுத்தத்தை நிரந்தரமாகத் தீர்க்காது. மாறாக ஏதே ஒரு வடிவில் யுத்தம் புகைந்தவண்ணம் தான் இருக்கும்.



# மனங்கள்

அம்மாவின் எரிச்சலான பேச்சைக் கேட்டுவிட்டு, பாயைவிட்டெழுந்து அடுப்படிக்கு தேனீர் போடுவதற்காக சென்ற மஞ்சு, அடுப்பில் தேனீருக்கான நீரைவைத்து அடுப்பை பற்றவைத்துவிட்டு திரும்பவும் பாயில் வந்து சரிந்தவளை சற்று முன் அம்மா சொன்ன அந்த வசனம் அழுத்திக் கொண்டிருந்தது.

அவளது அம்மா இதற்கு முன் எவ்வளவோ அவளைப் பேசியிருந்தாலும் சற்று முன் சொன்ன வசனம் ..............

உன்னால மானக் கேடாயிருக்கு............ உன்னால மானக் கேடாயிருக்கு

திரும்பத் திரும்ப அவள்மனம் அதையே அசைபோட்டது. அத்துடன் அவ்வசனத்தின் ஒவ்வெரு சொல்லிலும் தனக்குச் சமுதாயத்தால் அளிக்கப்படுவதற்குக் காரணமாயிருந்த அந்தப் பழைய நினைவுகளையும் ஒருகணம் நினைவுபடுத்தியது.

ஆம்!...... அவள் செய்ததுதான் என்ன? ..........

காதல் கொண்டாள் புரட்சியின்பால் .......

ஈழத்தேசவிடுதலையின்பால் பற்றுவைத்தாள். தன் வர்க்கச் சிறையுடையும் எனக் கனவுகண்டாள்.

அன்று ஊரில் ஒரே கலகலப்பு ஊரின் அத்தனை பத்திரிகைகளிலும் அது சுடச்சுட வெளிவந்திருந்தது.

எடி புள்ள!.... ஒரு கதை தெரியுமே?.... நம்ம சண்முகத்தோட மகள் ஓடிற்றாளாம்

என்னக்கா செல்லுறாய்? ........ ஏந்தப் பெட்டை?........ நடுவிலுப் பெட்டையா அல்லது கடைசிப் பெட்டையா?

நடுவிலுப் பெட்டை மஞ்சு தான் ஓடிற்றாளாம். ஆரோடை தெரியுமே? உன்ர மச்சான் விமலனோடதான்

என்ன விமலனோடையே? ஓமடி புள்ள ...... ராத்திரித்தான் நடந்ததாய்க் கதைக்கினம்......... சின்னராசுவேட பொடி ராத்திரி செங்கோல் அண்ணா வீட்டில ரீ.வி பார்த்திட்டு வரக்க இவள் மஞ்சு கோயிலடியில மோட்டைச்சைக்கிலில ஏறிப்போனதைப் பார்த்தானாம் ....அதோட ராசம்மாவும் மகள காணேல்லையெண்டு காலம்பற தேடினவள்

ஓம்......... ஓம்...... ஏன் தேடமாட்டாளவையள்?... இரவேடு இரவாய் ஓடவிட்டுட்டு தேடுறமாதிரி நடிக்கிறாளவையள்....... பொறு இன்டைக்கு தம்பியிட்டச் செல்லி அவளவைய ஒருகை பாக்கிறன்

இவ்வாறு ஊரில் உள்ளவர்கள் அனைவரும் ஊதிஊதி அது சண்டையாக உருவெடுத்தது. இப்படியான நிகழ்வுகள் அவ்வூரில் அடிக்கடி நிகழ்வது இயற்கையே. காரணம் அவ்வூரில் வாழும் அனைவரும் சாதி, சமய ரீதியாகவும் உறவு ரீதியாகவும் இணைக்கப்பட்டிருப்பது தான்.

அப்போது பிரச்சனைக்குக் ஒருவகையில் காரணமாயிருந்த மோட்டார் சைக்கிள்கள் வரும் ஒலி அனைவரையும் ஒருகணம் நிசப்தப்படுத்தியது. இரு மோட்டார் சைக்கிள்களில் நான்கு இழைஞர்கள் அமர்ந்திருந்தனர். இவர்கள் அனைவருமே டெனிம் முழுக்காற்சட்டையும் பெரிய செட்டுக்களை அணிந்து கைகளை மேலே மடித்து விட்டிருந்தனர். அவர்களில் இருவர் கூட்டத்தை நோக்கிவர மற்றவர்கள் சிறிது விலகி எதிர்திசையில் கூட்டத்தை நோக்கியவண்ணம் நின்று கொண்டிருந்தனர். கூட்டத்தை நோக்கிவந்த இருவரில் ஒருவன் விமலன். இவர்கள் வருவதைக் கண்ட சிலர் நமக்கேன் தேவையில்லாத பிரச்சனை என்று நழுவினர்.

விமலுடன் வந்த மற்றவன் கூட்டத்தை அமைதியாக இருக்கும் படி கூறிவிட்டு, வழமைபோல தங்களை அறிமுகப்படுத்திவிட்டு பேசத்தொடங்கினான்.

இன்று ஈழத்தில் எமது முன்னணியானது மார்க்சிச, லெனினிசக் கருத்துகளூடாக மக்களை அணிதிரட்டி அவர்களைப் புரட்சிப் பாதையூடு நடத்திச் செல்லும் திட்டத்துடன் செயற்படுகின்றது. எமது விடுதலைப் பாதையானது தேசவிடுதலை, வர்க்க விடுதலை போன்ற பாதைகளூடாகச் சென்று ஒரு சோசலிச சமுதாயத்தை உருவாக்கும் நோக்கம் கொண்டது. இன்று இக்கிராமத்தில் இருந்து எமது முன்னணியில் ஒரு தோழர் இணைந்துள்ளார். இதனால் இங்கு ஏற்பட்ட குழப்பங்களுக்காக வருந்துகிறோம். நாம் நமது முன்னணியில் தோழர்களை வென்றெடுக்கும் போது அவர்களை எமது கொள்கை ரீதியாக வளர்த்தபின்பே அவர்களை எம்முடன் இணைத்துக் கொள்வோம். ஆனால் சில சந்தர்ப்பங்களில் அவ்வாறு செய்ய முடியாத நிலையில் உள்ளோம். காரணம் எமது சமூக அமைப்பு. எமது சமூக அமைப்பானது கலாச்சாரங்களால் முற்று முழுதாக ஆக்கிரமிக்கப்பட்ட ஒன்றாகவும், ஆணினத்தின் ஆளுமையால் ஆழப்பட்டுவரும் பிற்போக்குத் தன்மை கொண்டதாகவும் இருந்து வருகிறது. எமது சமுதாயத்தில் எத்தனை வீதமான பெண்களால் சுதந்திரமாகவும் சுயவிருப்புடனும் செயற்பட முடிகிறது? தடைகளையும் மீறி சுயமாகவும், சுதந்திரமாகவும் செயற்பட்டவர்கட்கு, செயற்படுவோர்க்கு இச்சமுதாயம் தரும் மதிப்பென்ன? ஒருகணம் சிந்தியுங்கள். ஆம் இன்று எமது சமுதாயத்தில் சிறையுடைத்த இந்தப் பறவைகளுக்கு நாம் வளங்கிய பட்டங்களே அவர்களுக்கு எம் சமூகம் தரும் மதிப்பையும் மரியாதையையும் எந்த அளவில் உள்ளதென அளக்கும் அளவு கோலாய் உள்ளது. இப்படியான

சமூக அமைப்பில் ஒரு பெண் வீட்டைவிட்டு வெளியேறி செயற்பட யார்தான் அனுமதிப்பார்கள்? (முனைவது எவ்வளவு கடினமான வழிடையம்)

இப்படியான சந்தர்ப்பங்களில் தான் நாங்கள் ரகசியமான முறையில் வீட்டாருக்குத் தெரியாமல் எம்முடன் இனைத்துக் கொள்கின்றொம். இவ்வாறு தன்பேச்சை முடித்துக் கொண்டு அங்கிருந்து கிளம்பினார்.

அவர்கள் மோட்டர் சைக்கிள் ஓடிச்சென்ற பாதை மண்ணால் அமைக்கப்பட்டிருந்ததால் ஒரே புழுதிமண்டலமாக இருந்தது.

பெண்கள் பாசறை வழமை போல இயங்கிக் கொண்டிருந்த சமயம் மோட்டார் சைக்கிள் இரைச்சல் எல்லோர் கவனத்தையும் ஈர்த்தது. ஆனால் மஞ்சு மட்டும் எதையோ பறிகொடுத்தவள் போல கோலில் ஒரு முலையில் போடப்பட்டிருந்த கதிரை மீது அமர்ந்திருந்தாள்.மோட்டார் சைக்கிளில் வந்தவர்கள் அவற்றை மர நிழலில் விட்டுவிட்டு உள்ளே நுழைந்தனர். அவர்களுடன் விமலும் வந்திருந்தான். வந்தவன் மஞ்சுவைக் கண்டதும் அவளருகில் சென்றான். ஏதோ சிந்தனையில் இருந்த அவளுக்கு அவன் வருகைவிழிப்பேற்றியது. அவள் மனச்சுமைகள் விழியோரம் பனிபோல் கரைந்தோட விமலனை நோக்கி ஊர்ப்பக்கம் போனீங்களா? என்னைப்பற்றி........ என்ன........

என விக்கலுடன் வினாவ முற்பட்டவளை இடைமறித்த விமலன், மஞ்சு, எனக்கு விளங்குது நீ என்ன கோட்கப் போறாயெண்டு? ........ என்ன செய்வது உனக்குத் தெரிந்தது தானே எங்கட ஊர் எப்படியெண்டு? ............ ஏற்கனவே நம்மைப்பற்றி கதையடிபடுது...........நீர் தோழர்களோடு இரவு வந்ததாக தோழர் ஜேயசீலன் மூலம் அறிஞ்சன். எனக்குத் தெரியும் ஊரில ஏதேனும் நடக்குமெண்டுஅதனாலதான் தொகுதி வேலைகளையும் விட்டு ஊர்பக்கம் போனனான்....... நினச்சமாதிரி நடந்தது. இவ்வாறு நடந்தவையையும் மஞ்சுவின் எதிர்கால நடவடிக்கைகள் பற்றியும் பேசிக்கொண்டிருக்கும் போதுபெண்கள் முகாம் பொறுப்பாளரது வரவும் பொருத்தமாயிருந்தது.

இப்போது விமலன் கரவேட்டிப் பகுதியில் அமைப்பின் சார்பில் நியாயவிலைக் கடையொன்றை நடாத்திக் கொண்டிருந்தான். மஞ்சுவும் அப்பகுதியில் பெண்களமைப்பாளருடன் பெண்கள் விடுதலை முன்னணி அமைப்பு வேலையில் ஈடுபட்டிருந்தாள்.

அன்று மஞ்சு முகாமில் சமைக்கும் முறையாதலால் அமைப்பு வேலைக்குச் செல்லவில்லை. அன்று தேவையான சாப்பாடுகளை சமைத்து வைத்துவிட்டு அடுத்தநாள் பெண்கள் பாசறைக்கான விரிவுரைகளை ஆயத்தப்படுத்த சில புத்தகங்களைப் புரட்டியவண்ணம் இருந்தவள் அப்படியே அசந்து தூங்கிவிட்டாள். அமைப்பு வேலைக்காகச் சென்ற அனைவரும் வேலையை முடித்து விட்டு அமைப்பு வாகனத்தில் வந்திறங்கினர். வாகனத்தை விமலின் நண்பனான குணா ஓட்டிவந்தான். இவர்களது வரவால் ஏற்பட்ட சத்தத்தால் விழித்தெழுந்தாள் மஞ்சு. அவளை நெருங்கிய குணாவை நோக்கி என்ன குணா கனநாள் கண்டு...... என்றவாறு பேச்சை ஆரம்பித்தாள்.

உங்களிட்டைதான் வந்தனான்...... மற்றது தோழர் விமலுக்கு இரவு ரத்தினங் கடையில் காலில கண்ணாடி வெட்டிப்போட்டுது......... கடை றுமிலதான் படுத்திருக்கிறார். என்றான் குணா.

அசதியில் இருந்தவளை ஒரு கணம் அசத்தியது. கதிரையை விட்டு எழுந்தவள் முகாம் பொறுப்பாளர் சாந்தியிடம் செல்லிவிட்டு வருவதாகவம் அதுவரை தனக்காக காத்திருக்கும் படியும் குணாவிடம் கூறிவிட்டு காலை ஒரு அடியெடுத்து முன்வைத்தாள். அப்போது அவள் காலில் ஒரு நெருடல் நெருடுவதை உணர்ந்தாள்.

வாகனம் சென்று கொண்டிருந்தது........... அவர்கள் மத்தியில் மட்டும் நிசப்தம் நிலவியது.

கதவு தட்டப்படும் சத்தம் கேட்ட விமல் எழுந்து நிற்க முற்பட்டான். அதற்கிடையில் குணாவும் மஞ்சுவும் உள்ளே நுழைந்து விட்டனர். உள்ளே நுழைந்த குணா அடுப்பில் தேனீருக்காக நீரை வைத்துவிட்டு அவர்களிடம் ஏதோ செல்லத்திரும்பினான் ஆனால் அவர்களஇ அதைக் கேட்கும் நிலையிலில்லை.


கண்ணாடியால் காயம்பட்ட அவனது வலி கலைந்துகொண்டிருந்தது. உடலில் அசதி, உணர்வின் ஒளிபட்டு ஓடி ஒழிந்து கொண்டது. அணைபோட்டுத் தடுத்திருந்த அன்பெனும் ஜீவநதிஅணையுடைத்துப் பாய........ ஒளிகொடுத்ததுக்களைத்து, சூரியன் வெம்மை தணிக்க கடலண்டை சென்றுகொண்டிருந்தான்.

கனவுகளின் ஜனனங்கள் ............, மறைவுகளுக்கு அஞ்சலிகள்..........., சாம்பல் பூத்த மேடுகளில் சபதங்கள்........., துமிமுளைக் காளான்கள் போல் வரலாறு கூறப் புறப்பட்ட உரத்த இரவுகளின் ஈடுஇணையற்ற தாக்கங்களுடன் புரட்சிப்பணி ஏதோ வழியில் சென்றுகொண்டிருந்தது. அன்று வழமைபோல அமைப்பு வேலை முடித்து முகாம் திரும்பிய மஞ்சு, கிணற்றடிக்குச் சென்று முகங்களுவிவிட்டு சமயற் கட்டினுள் நுழைந்தாள். அங்கே முகாம் பொறுப்பாளர் சாந்தியும் மற்றும் சிலரும் சமையலில் ஈடுபட்டிருந்தனர்.

என்ன மஞ்சு களைச்சுப் போய் வாறீர் போல இருக்கு என்ற வாறு மஞ்சுவுடன் பேச்சை ஆரம்பித்தாள் சாந்தி.

அப்பிடி இல்லை! வேலை முடிஞ்சு வரும்போது சைக்கிள் காத்துப் போயிட்டுதுஅதால உறுட்டிக்கொண்டு வந்தனான்

என்ன உம்மோட றோகினி



வந்தாவேல்லே......... சைக்கிள எங்கையேன் தெரிஞ்ச வீட்டில விட்டுப்போட்டு றோகினியின்ற சயிக்கிலில வந்திருக்கலாம் தானே? என்று வினாவினாள் சாந்தி. ஓவ் செல்ல மறந்திட்டன் இண்டைக்கு ரோகினியின்ற ஊர்ப்பக்கம் போயிருந்தம். றோகினியோட அம்மாகண்டுவிட்டு வீட்டுக்கு கூப்பிட்டா........ அந்த அம்மா ஒரே அழுகை......... ஏதோ றோகினிக்கு ஜேர்மனில் பெடியன் பாத்திருக்கினமாம்..... அதால அவளையும் அங்க அனுப்ப முயற்றி செய்யினமாம்....... ஆனா றோகினிக்கு விருப்பமில்லை. அந்த அம்மா அழுதழுது சொன்னா, றோகினியை அனுப்பினா தங்களுக்கு நிம்மதியாம். பாரம் குறைங்சிருமாம் இதற்கு மேலேயும் எனக்கு அங்க நிற்க முடியேல... மற்றது றோகினி ரண்டு நாள் வீட்டில நிண்டிட்டு வாறதாம் என்டாள் என்று தொடர்ந்த மஞ்சுவை இடைமறித்தவண்ணம் சாப்பிடவருமாறு ஒருத்தி அழைக்கவே எல்லோரும் சாப்பிடுவதற்கு ஆயத்தமாயினர்.

1986ஆம் ஆண்டு விடுதலையின் பெயரால் புதிய இனந்தெரியாத சமாதிகள். பதவி(கதிரை)யின் பெயரால் அந்தரங்கப்பிரிவினைகள், இவற்றிடையே சிக்கித்தவித்தவண்ணம் சிறையுடையும் எனக்கத்திருந்து–இலவுகாத்த கிளிகளாய்.......

மஞ்சு.......! மஞ்சு.........!

பாயில் படுத்தபடி இறந்த கால நினைவுகளை அசைபோட்டுக் கொண்டிருந்தவளை ஏழுப்பினால் அவள் நண்பி கமலா.

என்னடி அழுகிறாய் போல கிடக்கு. முகமெல்லாம் காஞ்சுபோயிருக்கு. எனக்குத் தெரியுமடி நீ பழசையெல்லாம் நினச்செண்டு இருக்கிறாயெண்டு. எடியே!........ அதையே நினைச்சண்டு இருந்தா என்ன வரப்போகுது?......... பணத்தையும் அந்தஸ்தையும் அளவுகோலாக் கொண்டு வாழ்வையும் மனிதரையும் எடைபோடுர இந்த சமுதாயத்தில அவன் மட்டுமென்ன விதிவிலக்காடி?........

என்று வந்தவுடனேயே தனது பிரசங்கத்தை தொடர்ந்த கமலாவை இடைமறித்த மஞ்சு, அதில்லையடி, வீட்டைவிட்டு வெளியே போகேல்லாம இருக்கு......... எல்லோரும் என்னை ஒருமாதிரியாய் பாக்கினம்........... எனக்கு உயிர் போறமாதிரி இருக்கு.......... ஏன் அதுமட்டுமா வீட்டில கூட நின்மதியில்லையடி.......... அம்மா ஒரே சத்தம் போட்டண்டு இருக்கு..........

எடியே எனக்கெண்டா விளங்கயில்லையடி! நீ என்ன புதுசாய் கிளிச்சிட்டாய்?........ இயக்கத்துக்குப் போனாய், அதுதான் எல்லோருக்கும் தெரியுமே, புரட்சியெண்டு கதைச்சுக் கொண்டு எல்லாத்தையும் அடகுவைச்சுக் கொண்டு திரியிறாங்களெண்டு......... வேறையென்னடி லவ் பண்ணினாய்......... அவனவன் ஊரைவிட்டு, நாட்டைவிட்டு ஓட என்னென்னவோ பண்ணுறாங்கள்........ விமலனென்ன அதுக்கு விதிவிலக்கா? கனடாவுக்கு அனுப்புறாங்களெண்டவுடனை எடுபட்டுப் போயிற்றான். அதுக்கு நீ என்னடி செய்யிறது? மற்றது என்னடி உங்கட அம்மாவோட ராசமணி ஏதோ பேசினாவாம், உன்ன ஓடுகாலி ஆட்டக்காறி எண்டெல்லாம் பேசினாவாம்......... அவமட்டுமென்ன சிவத்தோட ஓடப்........ என்ற தொடர்ந்த கமலாவை தடுத்த மஞ்சு

கமலா, அவ அப்படி விளங்காத தன்மையில பேசிட்டா எண்டதுக்காக நீயும் அதே தவறைச் செய்ய முனைகிறாய் .......... உண்மையில் எங்கட சமுதாயத்தில் எங்கட இந்த நிலமைக்கு நாங்களும் காரணமாய் இருந்து கொண்டுதானடி இருக்கிறம். ஏனண்டா நாங்கள் இந்த சமுதாயத்தால அப்படிப் பழக்கப்பட்டு விட்டம். எங்கட கலைகலாச்சாரங்களும், இலக்கியங்களும் சீதை கேடு தாண்டிய கதைகளைக் கூறி எச்சரிக்கை உணர்வையும், படிதாண்டாப் பத்தினி என்று பட்டங்கொடுத்து, கணவனைக் கூடையில வைத்து தூக்கவும் கற்றுத் தந்தனவேயொழிய வேறொண்றும் இல்லையடி.........

மஞ்சு என்னடி அடுப்படியில புகைக்கிது? என்ற கமலாவின் எச்சரிக்கைக்கு ஓ மறந்திட்டனடி...... தேத்தண்ணிக்கு தண்ணி வைச்சனான்........ வாடி அடுப்படிக்கு என்றவாறு மஞ்சு பாயைவிட்டெழுந்து ஆடுப்படியை நோக்கி அடிவைத்தாள்.

இக்கதையானது ஏற்கனவே பிரசுரிக்கப்பட்ட போதும் இச்சிறுகதை கதாசிரியரின் முழு அனுமதியுடனும் காலத்தின் தேவைகருதி பிரசுரிக்கின்றோம்.

# யாழ் நகர் மீதான தாக்குதலும் மக்களின் நிலையும்!

**இலங்கை இனப்பிரச்சனைக்கு அரைகுறை அரசியல் திட்டத்தினாலோ, முழு அளவிலான இராணுவப் படையெடுப்புகளாலோ விடிவு காண முடியாது என்பது மீண்டும் ஒருமுறை நிருபணமாகியுள்ளது.**

போர் என்பதன் உடனடி நோக்கம் தன்னைக் காத்துக் கொண்டு எதிரியை அழிப்பது தான். இது எல்லாப் போர்களுக்கும் பொருந்தும். போர்க்களம் என்றாலே அது கோரமாகத்தான் இருக்கும். அங்கே மனிதாபிமானம் பற்றி பேச்செல்லாம் பத்தாம்பசளித்தனமே. ஆகவே எதிரிப்படையைக் கொல்வதில் ஈவிரக்கமற்ற மிருக வெறியைப்புரிந்து கொள்ள முடியும். யூலை 28ந் திகதி அதிகாலையில் ஈழத்தின் விழும்பில் உள்ள மணலாறு வெலிஓயா சிங்கள இராணுவ முகாமைத் தாக்குவதற்கு முன்னேறிய தமிழீழ விடுதலைப் புலிப்படையை, ஈழத்துரோகிகளின் உளவுச் செய்தியை முன்கூட்டியே அறிந்த சிங்கள இராணுவம் சுற்றி வளைத்து அவ்வளவு பேரையும் கொன்று துவம்சம் செய்தது.

சிங்கள இராணுவத்தின் கணக்குப்படி 280 புலிகள் இந்தத் தாக்குதலில் கொல்லப்பட்டனர். அதில் 128 பெண்கள். பலர் சிறுவர்கள். இதே போன்று எதிர்பாராத் தாக்குதலை நடத்தி பெரும் எண்ணிக்கையில் கொன்றழிப்பதை புலிகளும் செய்துள்ளனர். முன்பு பூநகரியில், சமீபத்தில் மண்டை தீவிலும் சிங்கள இராணுவமுகாம்களின் மீது நடந்த திடீர் முற்றுகைத் தாக்குதலில் எதிரிகள் பேரிழப்பிற்கு உள்ளாகினர்.

ஆனால் யூலை 28 மணலாறு வேலிஓயாவில் நட3ந்த இராணுவத் தாக்குதலுக்குப் பிறகு நடந்தவை பேரதிர்ச்சியைத் தருபவை. இந்த வெற்றியை சிங்களை இனவெறி இராணுவத்தினர் மிகவும் குரூரமான, வக்கிரமான முறையில் உலக இராணுவ போர்களின் வரலாற்றில் வேறெங்கேயும் இப்படியும் நடக்குமா என்பது சந்தேகமே கொண்டாடியிருக்கின்றனர். போரில் கொல்லப்பட்ட புலிப்படையின் பெண் போராளிகள் அவ்வளவு பேரும் நிர்வாணமாக்கப்பட்டு, வரிசையாக அடுக்கப்பட்டு பொதுமக்களுக்கும், பத்திரிகையாளர்களுக்கும் காட்டப்பட்டதோடு, அந்தக் குரூரமான, வக்கிரமான காட்சி வானொளிகளிலும் காட்டப்பட்டது.

மணலாறு வெலியோயா படுகொலையின் வெற்றிக்களிப்பில் சிங்கள இராணுவமும், அரசும் மிதந்து கொண்டிருந்த அதேசமயம் அவர்களுக்கு தக்க பதிலடி கொடுக்கத் தொடங்கிவிட்டனர் விடுதலைப்புலிகள். இராணுவ முகாம்களைப் பார்வையிட்டுத் திரும்பிய கிழக்கு இராணுவ அரசாங்கத் தலைமைத் தளபதி பிரிகேடியர் நளின் அங்கமானாவை கண்ணிவெடி வைத்துக் கொண்றொழித்தனர். அடுத்த சில நாட்களிலேயே, கொழும்பு நகரின் மத்தியிலுள்ள இலங்கை மேற்கு மாகாண முதலமைச்சரின் அலுவலகத்தைக் குண்டு வைத்து தகர்த்தனர். 20 பாதுக்கும் மேலான அரச ஊழியர்கள் மாண்டதோடு 50திற்கும் மேலானோர் படுகாயமுற்றனர். அத்தோடு ஓரிரு நாட்களிலேயே மட்டக்களப்பிற்கு அருகில் உள்ள ஒரு இராணுவ முகாமில் குண்டு வைத்து சிலரைக் கொண்றொழித்தனர்.

இலங்கை – ஈழத்தமிழர் சுயநிர்ணய உரிமைப்பிரச்சனை, மீண்டும் அடுத்த சுற்று வலையம் வந்து தீர்வு காண முடியாத இழுபறி நிலைக்கு திரும்பியுள்ளது. 1983 யூலை ஹுழத்தமிழர் மீதான இனப்படுகொலைக்குப் பிறகு போர், போர்நிறுத்தம், சமாதானப் பேச்சு வார்த்தை மூலம் தீர்வு காண முயற்சி, அது முறிவு, மீண்டும் போர் என்கின்ற பாதையில் நான்கு சுற்றுக்குள் வந்து விட்டது. பிரச்சனைக்கு அரைகுறையான அரசியல் திட்டம், தீர்வுகளினாலோ, முழு அளவிலான இராணுவப்படையெடுப்புகளாலோ விடிவு காண முடியாதென்பது மீண்டும் ஒருமுறை நிறுபணமாகியுள்ளது. ஆனால் ஒவ்வொரு முறையும் பிரச்சனை மேலும் சிக்கலாவதோடு இராணுவ ரீதியில் மட்டுமல்லாது இருதரப்பிலும் குறிப்பாக ஈழத்தமிழர்களுக்கு பேரிழப்புகளும் துயரங்களும் அதிகரித்தே வருகின்றன. ஆனால் சந்திரிக்கா தலைமையிலான இலங்கை அரசு, விடுதலைப்புலிகள் ஆகிய இரு தரப்புமே இப்போது நடப்புது இறுதிக்கட்டப்போர் எனறு பிரகடனப்படுத்தியுள்ளன.

பன்னிரெண்டு ஆண்டுகளாக நீடித்து வரும் இலங்கை உள்நாட்டுப் போருக்கு இதுவரையில் காணாத மிகமிகச் சரியான, திறமையான தீர்வேன்றை அதிபர் சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்கே கண்டுவிட்டதாக உலகின் பிற்போக்கு சக்திகள் அனைத்தும் புகள்கின்றன. 1993 இல் நடந்த மாகாண சபைத் தேர்தலில் வென்று மேற்கு மாகாண முதல்வராவதற்கும், அதன் பின் 1994 இல் நாடாளுமன்றத் தேர்தலில் வென்று பிரதமராவதற்கும், அப்புறம் 194 இறுதியில் அதிபர் தேர்தலில் வெல்வதற்கும் அடிப்படையாக, ஈழப்பிரச்சனைக்கு சமாதானத் தீர்வு காண்பதே தமது லட்சியம் என்கின்ற முழக்கத்தை முன்வைத்தார். நீண்ட போரினால் அவதிப்பட்ட சிங்கள மக்களின் பெரும்பான்மை ஆதரவைப் பெற்று அடுத்தடுத்து உயர்ந்த பதவிகளைப் பெற்று அதிபரானார்.

பிரதமராக இருந்த போதே போர்நிறுத்தத்தைக் கொண்டு வந்து, புலிகளுடன் நல்லிணக்கத்தை ஏற்படுத்திக் கொண்டு பேச்சு வார்த்தைக்கு அடித்தளமிட்டார். போர் நிறுத்தம், பொருளாதாரத் தடைநீக்கம், 4000 கோடி ரூபாய் ஈழ அபிவிருத்தி–மறுசீரமைப்புத் திட்டம்வழங்கினார். ஆனால் யுத்தவெறிபிடித்த பிரபாகரன் போர்நிறுத்தத்தைப் பயன்படுத்திக் கொண்டு, இராணுவ பலத்தைப் பெருக்கிக் கொண்டு ஒருதலைப் பட்சமாக போர்நிறுத்தத்தை முறித்துக் கொண்டு மீண்டும் போரைத் துவக்கினார். இது சந்திரிக்காவிற்கு ஏமாற்றமளித்தாலும், முன்னேறும் பாச்சல் நடவடிக்கை என்னும் இராணுவத் தாக்குதலில் இறங்கி ஈழத்தின் பலபகுதிகளை புலிகளிடமிருந்து மீட்டு இராணுவ ரீதியில் மேல் கை நிலையை ஏற்படுத்துவதில் வெற்றிகண்டார்.

அதேசமயம் இராணுவத் தீர்வை மட்டும் நம்பியிராமல் கடந்த ஆகஸ்ட் மாதம் 3ந் திகதி ஒர அரசியல் திட்டத்தையும் அறிவித்துள்ளார். சிங்கள இனவெறிக் கலவரத்தில் தகர்க்கப்பட்ட 1957 பண்டாரநாயக்க, செல்வா ஒப்பந்தம், புலிகளால் தகர்க்கப்பட்ட 1987 ராஜுவ், ஜெயவர்த்தனா ஒப்பந்தம் ஆகியவற்றைக் காட்டிலும் ஈழத்தமிழர்களுக்கு கூடுதலான அதிகாரத்தை வழங்கக் கூடியது சந்திரிக்கா அறிவித்துள்ள இத்திட்டம். முதன்முறையாக இலங்கையின் ஒருமை அரசியல் அமைபஃபை மாற்றி, பிராந்தியங்களின் ஒன்றியமாக்கப்படும். ஆங்கிலம் இணைப்பு மொழியாகவும், தமிழ் சிங்களம் இரண்டுமே ஆட்சிமொழியாக்கப்படும். பிராந்திய முதல்வரும் அமைச்சர்களும் அடங்கிய வாரியம் அமைக்கப்படும். அவர்களுடைய ஒப்புதல் பெற்ற ஆளுநர்களே நியமிக்கப்படுவர். பிராந்திய சட்டமன்றத்துக்கு மட்டுமே பிராந்திய ஆட்சியை நீக்கும் உரிமை தரப்படும். பிராந்திய ஆளுநரோ மத்திய அரசோ (இந்தியாவில் செய்வதைப் போல) ஆட்சிக் கலைப்பு செய்ய முடியாது. மத்திய பிராந்திய அரசுகளுக்குப் பொதுவான அதிகாரங்கள் கிடையாது. இந்திய மாநிலங்களுக்குள்ளதை விட அதிக அதிகாரங்களும், ஒலி ஒளி பரப்பு உரிமைகள் நேரடி அந்நிய முதலீடு தொழில் வர்த்தக உறவுகளும் கூட ஏற்கப்படுகின்றன. தேசிய பேலீசு அமைப்ப இருந்தாலும் பிராந்திய அரசுகளுக்கு எதிரான அவசர ஆதிக்க அதிகாரம் எதுவும் மத்திய அரசுக்குக் கிடையாது இப்படி சந்திரிக்காவின் அரசியல் திட்டத்தின் அருமை பெருமைகளைப் பட்டியலிட்டும் அவரது ஆதரவாளர்கள் இதமன் மூலம் முதன் முறையாக இலங்கையில் பல மொழிச் சிறுபாண்மை இனபாகுபாட்டையும் பல பண்பாட்டு மாறுபாட்டையும் அதிகார பூர்வமாக அங்கீகரிக்கப்படுவதாகப் போற்றுகின்றனர். பெரும்பாண்மையான ஈழத்தமிழர்கள் ஏற்கக் கூடியதுதானென்றும் சிங்கள இனத்தவரும் குறிப்பாக இனவாத அரசியல் கட்சிகளும், குளுக்களும் ஏற்க வைப்பதில் தான் சிரமமுள்ளது என்றும் விடுதலைப் புலிகள் இத்திட்டத்தை தகர்க்க முயன்றாலும் தமிழ் மக்களிடமிருந்து அவர்களைத் தனிமைப்படுத்தி இராணுவ ரீதியில் ஒடுக்கிவிட முடியும் என்றும் நம்பிக்கை தெரிவிக்கின்றனர்.

ஆனால் சமாதான முயற்சி போர் நிறுத்தம் என்ற பெயரில் சந்திரிக்கா அரசும் இராணுவத் தயாரிப்பில் ஈடுபட்டிருந்தது. அமைதியைக் கருணையைப் போதிக்கும் புத்த பிக்குகள் கூட சிங்கள இனவெறிர்களாக உள்ளதால் தமது காவியுடையைக் கலைந்து விட்டு இராணுவத்தில் சேருகின்றனர். பெண்கள் உட்பட சிங்கள இளைஞர்களை இராணுவத்தில் சேரும்படி துண்டுகின்றனர். இதையெல்லாம் ஒருபுறம் செய்து கொண்டே அதிகாரப் பகிர்வு சமாதானம் என்கிற மாய்மாலம் செய்கிறது சந்திரிக்கா அரசு. ணழத் தமிழின துரோக அமைப்புகள் இதை ஏற்கும் அதேசமயம், கிழக்கு மாகாணத்தில் தமிழர் பெரும்பான்மையாக வாழும் பகுதிகளில் மட்டுமே வடக்குடன் இணைக்கப்பட்டு தமிழர் பிராந்தியம் அமைக்கப்படும் என்பதை மட்டும் அட்சேபிக்கின்றனர். இது இலங்கைக் குடியேற்றத்தை அங்கிகரித்து நிரந்தரமாக்கிவிடம் எனக் கூறுகின்றனர். ஏற்கனவே வரதராஜப்பெருமாள், பத்பநாபா கும்பல் செய்வதைப் போல ஈழத்தில் இன்னேரு துரோகப் பொம்மை ஆட்சியை நிறுவிவிடத் தயாராகி வருகின்றனர். ஆனால் அதற்கு அவர்கள் உயிரையே விலையாகத் தரவேண்டி இருக்கும். மணலாறு வெலிஓயாத் தாக்குதலினால் பேரிழப்பையும், பின்னடைவையும் சந்தித்த போதிலும் எதிர் தாக்குதலைத் தொடங்கிவிட்ட விடுதலைப் புலிகள், சந்திரிக்காவின் அரசியல் திட்டத்தை முற்றாக நிராகரித்து விட்டனர். ஜேயவர்த்தனா, பிரேமதாசா முதலிய முந்திய சிங்கள அரசு அதிபர்கள் கொடூரமான இனவெறியர்களாக மட்டுமே இருந்தனர். ஆனால் அத்தோடு சந்திரிக்கா ஒரு தந்திரிகா எண்ணுமளவு சூழ்ச்சி சதிகாரியாகவும் இருக்கின்றார் என்கின்றனர் புலிகள். ஆனால் அதே புலிகள் தாம் பிரதமராகவும், அதிபராகவும் பதவியேற்று பேச்சு வார்த்தை போர்நிறுத்தம் தொடங்கியபோது உண்மையான ஜனநாயகவாதி, சமாதான விரும்பி என நம்பும்படி ஈழத் தமிழர்களுக்கு சொன்னார்கள். தனி ஈழம் மட்டுமல்ல, சுயநிர்ணய உரிமைகூடத் தேவையில்லை, மாநில சுயாட்சியானாலும் ஏற்கத் தயார் என்ற புலிகளின் சித்தாந்தக்குரு அன்டன் பாலசிங்கம் அறிவித்தார். ஆனால் இப்போது போர் ஒன்றுதான் என்று எழுச்சியில் இறங்கிவிட்டனர். நிதியும், ஆட்பலமும் இருந்தால் 20ம் நூற்றாண்டுக்கு முன் ஈழம் மலரும் என்று புலிகளின் நிதிப்பொறுப்பாளர் தமிழேந்தி கூறுகிறார்.

நிதிபலமும் ஆயுதபலமும் திரட்டுவது கூட சாத்தியமாகலாம், புலிகள் அதில் திறமை சாலிகள் தான்

www.tamilarangam.net

**Til**

# BLAD

**Fra**
**Sumaihal**
**P.Boks 415**
**9001 Tromsø**
**Norway**

ஆனால் முடிவே இல்லாமல் போரிடவும், பலியிடவும் தேவையான படைபலம் அவர்களுக்கு எங்கிருந்து எப்படி பெறமுடியும். ஒரு தலைமுறையின் இளைஞர்களின் பெரும்பாலானோர் கடந்த 12 ஆண்டு போர்களிலும், தோழமைக் கொலைகளிலும் குடியேற்றங்களிலும் இழந்தாகிவிட்டது. பெண்கள் இராணுவச் சேவையிலும், போரிலும் ஈடுபடுவது சரியானது, அவசியமானது. ஆனால் துப்பாக்கி சுமக்க முடியாத சிறுவர்கள் கூட ஈழப்போரில் பலியாக்கப்படுகின்றனர். ஈழ தேசபக்தியில் உறுதியோடிருப்பினும், புலிகளின் பாசிச தலைமையை ஏற்க மறுக்கும் காரணத்திற்காக பல இளைஞர்கள் ணழத்தில் இருந்து விரட்டப்படுகின்றனர், வேட்டையாடப்படுகின்றனர். புலிகளுடன் உடன்படாதவர்கள் கூட துரோக முத்திரை குத்தி வேட்டையாடப்படும் நிலையில் உண்மையிலேயே புலிகளிடையே துரோகிகள் உருவாகியிருப்பது மணலாறு வெளிஓயா சம்பவம் நிருபித்துள்ளது. தன் நிழலைக் கூட நம்பாத பாசிச புலிகளுக்கு இது மேலும் வெறியூட்டவே செய்யும்.

இராணுவ ரீதியில் வெற்றிகளைச் சந்தித்திருப்பதாக உரிமை பாராட்டினாலும் சமீபத்தில் அது கைப்பற்றிய சந்திப்பிளி, துண்ணாவி, பொன்னாலை, அராலி, வட்டுக்கொட்டை ஆகிய பகுதிகளில் இருந்து பின்வாங்கும் படி நிர்ப்பந்திக்கப்பட்டது. நாங்கள் சண்டைகளில் வெற்றி பெறமுடியும், ஆனால் போரில் வெல்வதென்பது சாத்தியமே இல்லை என்று சந்திரிக்காவே ஒப்புக்கொண்டுள்ளார். அதே சமயம் புலிகளும் இராணுவ ரீதியிலான இறுதி வெற்றியை ஈட்டமுடியாது என்பது தெளிவானது. இப்போது சந்திரிக்கா முன்வைத்துள்ள அரசியல் திட்டமோ ஈழத்தமிழரை தேசிய இனமாக அங்கீகரித்து சுயநிர்ணய உரிமைக் கோரிக்கையை ஏற்கமறுத்துள்ளது. இந்தியா மாநிலங்களுக்குள்ளதை விட கூடுதலான அதிகாரம் வளங்குவதாக இருந்தாலும் சுயநிர்ணய உரிக்க குறைவான எதையும் ணழத்தமிழர்கள் ஏற்க முடியாது. மேலும் சிங்கள அரசுகள் அறிவிக்கும் அதிகாரப் பகிர்வு ஒப்பந்தங்களை நேர்மையாக அமுலாக்கியதாக வரலாறே கிடையாது. சுயநிர்ணய உரிமைக்கு குறைவான எந்தவொரு தீர்வும் ஈழத்தமிழருக்கு துரோகமானதேயாகும்.

ஆனால் அதை அடைவதற்கு சில முன்நிபந்தனைகள் தேவை. விடுதலைப் புலிகள் பாசிசத் தலைமையை மாற்றி அமைத்து ஈழதேசபக்த ஜனநாயக சக்திகளையும் ஒருங்கிணைக்கும் பரந்த ஐக்கிய முன்னணி நிறுவப்பட வேண்டும். ஈழத்துரோக அமைப்புகள் தவிர இலங்கையிலும், வெளிநாடுகளிலும் புலம் பெயர்ந்துள்ள அனைத்து ஈழத் தமிழர்களும் அமைப்புகளும் ஈழம் திரும்பவம், சிங்கள இராணுவ ஆதிக்கத்துக்கு எதிராகப் போரிட அழைக்கப்படவேண்டும். அவ்வாறான ஐக்கிய முன்னணியின் கீழ் ஈழப்போரைத் தொடரும் அதே சமயம் ஈழ சுயநிர்ணய உரிமையை ஏற்கும் படி சிங்களப் பெரினத்திற்கு நெருக்கடியளை உருவாக்க வேண்டும். தொடரும் போர் அதை நிச்சையம் ஏற்படுத்தும். அதை அவ்வினம் ஏற்காமல் போனாலும் பரந்த ஈழ தேசிய ஐக்கிய முன்னணிதான் இராணுவ ரீதியான தீர்வுக்கு நிச்சயமான தலைமையை அமைக்கும்.

இக்கட்டுரை இந்தியாவில் இருந்து வெளியாகும் புதிய ஜனநாயகம் (1 ஆகஸ்ட் – 15 செப்டம்பர்) என்ற சஞ்சிகையில் இருந்து மீள் பிரசுரம் செய்கிறோம். இக்கட்டுரையுடன் நாம் முற்று முழுதாக உடன்படாவிட்டாலும் சமகால நிலையினைப் பற்றி எடுத்துக்கூறுவதாலும், சந்திரிக்காவின் சமாதானத் தீர்வுத் திட்டம் எந்தளவு பம்மாத்தானது என்பதையும், இதை இன்று சரி என வாதிடுபவர்களை இவர்களும் எவ்வாறு கணிக்கின்றனா என்பதை எமது வாசகர்களுக்கு படம் பிடித்துக்காட்டுவதற்காகவே மீள் பிரசுரம் செய்கின்றோம்.

சுமைகள்

